# தனித்துவம்

PUBLIC LIBRARY
KALMUNAI

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

قُلْ يٰۤاَيُّهَا الْكٰفِرُوْنَ ﴿١﴾ لَاۤ اَعْبُدُ مَا تَعْبُدُوْنَ ﴿٢﴾
وَلَاۤ اَنْتُمْ عٰبِدُوْنَ مَاۤ اَعْبُدُ ﴿٣﴾ وَلَاۤ اَنَا عَابِدٌ
مَّا عَبَدْتُّمْ ﴿٤﴾ وَلَاۤ اَنْتُمْ عٰبِدُوْنَ مَاۤ اَعْبُدُ ﴿٥﴾
لَكُمْ دِيْنُكُمْ وَلِىَ دِيْنِ ﴿٦﴾

(நபியே!) நீர் சொல்வீராக; காபிர்களே!
நீங்கள் வணங்குகின்றவற்றை நான் வணங்க மாட்டேன்
நான் வணங்குகிற ஒருவனை நீங்கள் வணங்குகிறவர்கள் அல்லர்
இன்னும், நீங்கள் வணங்குகின்றவற்றை நான் வணங்குபவனல்லன்.
மேலும், நான் வணங்குகிறவனை நீங்கள் வணங்குகிறவர்கள் அல்லர்
உங்களுக்கு உங்களுடைய மார்க்கம்;
எனக்கு என்னுடைய மார்க்கம்! (அல்குர்ஆன்)

- ஹாஜி உஸ்மான் சாஹிப்

வெளியீடு:
ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் பதிப்பகம்,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவம்

REFERENCE

297.4
சாஹி

- ஹாஜி உஸ்மான் சாஹிப் -

ACCESSION NO: 014908
CLASS NO: 297.4
PUBLIC LIBRARY
KALMUNAI

வெளியீடு :
ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் பதிப்பகம்
7/2, பிரதான வீதி,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
14908
014908

## BIBLIOGRAPHCAL DATA

| | | |
|---|---|---|
| TITLE OF THE BOOK | : | THANITHUVAM |
| AUTHOR | : | HAJI USMAN SAHIBO |
| LANGUAGE | : | TAMIL |
| EDITION | : | FIRST |
| DATE OF PUBLICATION | : | HIJRI 1419, RAMZAN (01 - 01 - 1999) |
| COPY RIGHT HOLDER | : | AUTHOR |
| NUMBER OF COPIES PRINTED | : | 1000 |
| PRINTER | : | ILAMPIRAI OFFSET - MARUTHAMUNAI |
| COPUTER TYPE SETTING | : | JANNA - MARUTHAMUNAI |
| PUBLISHER | : | HAJJATHUL ISLAM PUBLICATION |
| | | 7/2, MAIN STREET |
| | | KALMUNAI. |



ACCESSION NO: 014908

CLASS NO: 297.4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்.....


| | | |
|---|---|---|
| I. | சிறப்புரை | - 01 |
| II. | அணிந்துரை | - 04 |
| III. | முன்னுரை | - 07 |
| 01. | தனித்துவம் | - 10 |
| 02. | அமல் இல்லாமல் தனித்துவம் இல்லை | - 15 |
| 03. | எல்லாவற்றிலும் | - 17 |
| 04. | ஆலயங்களில் தனித்துவம் | - 19 |
| 05. | கையிடை | - 23 |
| 06. | வீண்விரயம் வேண்டாம் | - 24 |
| 07. | உழைப்பதில் தனித்துவம் | - 26 |
| 08. | நாட்டுப்பற்று | - 28 |
| 09. | மதமாற்றங்கள் | - 32 |
| 10. | வாழ்வே வணக்கம் | - 35 |
| 11. | அருளும், பொருளும் | - 38 |
| 12. | கொள்கைப் பிடிப்பும்; இலட்சியத் துடிப்பும் | - 40 |
| 13. | அரசியல் ஓர் இபாதத்; அது சாக்கடையல்ல | - 47 |
| | அ) நிரந்தர நட்பு; நிரந்தரப் பகைமை | |
| | ஆ) முஸ்லிம் நாடு; முஸ்லிமல்லாத நாடு | |
| | இ) அரசியல் ஓர் அமானிதம் | |
| | ஈ) பொதுச் சொத்து | |
| | உ) யானை விழுங்கிய விளாங்காய் | |
| 14. | தொகுப்புரை | - 61 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனாப். M.H. முஹம்மது ஆதம்** ***B.Com (SP.)***

***Dip-in-Education , Dip-in-Management***

அதிபர், தொழில்நுட்பக் கல்லூரி – சம்மாந்துறை

அவர்கள் செழுமையுடன் வழங்கிய

# சிறப்புரை

ஹாஜி உஸ்மான் சாஹிப்,
நாடறிந்த பேச்சாளர்! எழுத்தாளர்!! பன்னூலாசிரியர்!!!
அல்லாஹ்வுக்கன்றி,
வேறெவர்க்கும் கைகட்டி வாழாதவர்!
அரசியலில் எந்த அணியிலும்
சேர்ந்து சோரம் போகாதவர்!
நடுநிலையாளர் - நேர்மையாளர்!
சிறுபராயத்திலிருந்தே -
ஏறக்குறைய நாற்பதாண்டு காலம்
பேச்சால் - எழுத்தால் - சிந்தனையால்,
இஸ்லாமியப் பணி செய்து கொண்டு
தன்னடக்கமாய் வாழ்பவர்!
யாரிடமும் சேவகம் செய்யாது,
உழைப்பிற்கு மகிமைதந்து
ஒரு வேளைச் சோற்றையும் -
சொந்த உழைப்பினூடே பெற்று,
கிடைத்தது போதுமெனத் திருப்திப்படுபவர்!
உடுத்தும் ஆடைகளினாலும்,
இதர பண்புகளினாலும்,
தோற்றத்தின் பொலிவினாலும்,
இஸ்லாமியத்தை ஏந்திநிற்கும் ஒரு மனிதர்!
இவைதான் -
"ஹாஜி உஸ்மான் சாஹிப்" - இன்
இலட்சணங்கள்!
இவர் - இந்த
"தனித்துவம்" என்னும் ஆக்கத்தினைப் படைத்து -
இஸ்லாத்தின் மேன்மைகளை எடுத்துக்கூறி
எமது கரங்களிலே தவழவிட்டிருக்கிறார்.

PUBLIC LIBRARY
KALMUNAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில்
"தனித்துவம்"
ஒரு முஸ்லிமின் பாரம்பரிய,
கலாச்சார பழக்கவழக்கங்கள்,
கொள்கை நிலைகள் -
வணக்க அனுஷ்டானங்கள்,
வாழ்க்கை முறைகள்,
எத்தனை தனித்துவமிக்கது?
என்பதை
தனக்கேயுரிய மிடுக்கான
பாணியில் எடுத்தியம்பியிருக்கிறார்!
"நாட்டுப் பற்று ஈமானில் பாதி"
"அருளில்லாருக்கு அவ்வுலகமில்லை;
பொருளில்லாதாருக்கு இவ்வுலகமில்லை"
"அரசியல் ஒரு சாக்கடை"
என்றெல்லாம் எம்மிடையே
நாளாந்தம் பேசப்படுகின்ற
புகழ்பெற்ற சொற்றொடர்கள்,
இஸ்லாமியக் கண்ணோட்டத்தில்,
எவ்வாறு கருத்தற்ற சொற்களாகின்றன
என்பதனை எடுத்துக்கூறும் ஆசிரியரின்
ஆராய்ச்சித்திறன் வியக்கத்தக்கது!
மேலும் -
"அணி சேரா நாடு"
"மத சார்பற்ற நாடு"
"முஸ்லிம் நாடு"
"முஸ்லிமல்லாத நாடு"
என்றெல்லாம் தங்களை
வர்ணித்து வருகின்ற
இன்றைய உலக நாடுகளின்
முகமூடிகளை உடைத்து - அவற்றின்
உண்மை நிலைகளை எடுத்து,
அலசுகின்ற நூலாசிரியரின் சிந்தனைகள்
உண்மையில் உயர்ந்த -
வாசகர்கட்குக் கிடைக்கும் சிறந்த
கருத்துக்களாகும்!
இஸ்லாமே தனித்துவமானது;
இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுள்ள எவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய நெறிகளை -
இஸ்லாமிய அமல்களைக்
கடைப்பிடிக்கும் பொழுதுதான்
தனித்துவம் மலரும்!
தனித்துவத்தை யாரும் பெற்றுத்தர முடியாது;
அதனை -
ஒவ்வொரு முஸ்லிமினதும் உணர்வாலும்,
உணர்வுபூர்வமான நடத்தைகளினாலும்தான்
அடைய முடியும்!
என்பதனை,
இந்நூல் இயம்புகிறது!
பல்துறை வல்லுனருக்கும் -
பயன்தரும் இந்நூலினைத் தந்த
“ஹாஜி உஸ்மான் சாஹிப்”
வளமான, எமது வாழ்த்துதலுக்கும்,
போற்றுதலுக்குமுரியவர்!
நல்வாழ்த்துக்கூறி - எனது
நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

இவ்வண்ணம்
**இஸ்லாமிய ஊழியன்**
**முஹம்மது ஆதம்**

**கல்முனை - 04**
01-11-1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்முனை - 04, பெரியபள்ளிவாசல் (Grand Mosque of Kalmunai)**
**இன் கௌரவ கதீபும்,**
**மஸ்ஜிதுல் ஃபலாஹ்வின் பேஷ் இமாமுமாகிய**

**மௌலவி. நௌபர் அமீன் (வாஹிதீ)**

*அவர்கள் அன்புடன் வழங்கிய*

# அணிந்துரை

பேரன்புமிக்க பெரியோர்களே! வாசக நேயர்களே!! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்......)!

அளவற்ற அருளாளனாகிய அல்லாஹ்வின் கிருபையால்,

பன்னூலாசிரியர் ஹாஜி உஸ்மான் சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட, 'தனித்துவம்' என்னும் இவ்வுயர் ஆக்கத்திற்கு ஓர் அணிந்துரை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெரிதும் அகமகிழ்கிறேன்.

அன்றொருநாள், அதிகாலை நேரம், பள்ளியில் சந்தித்து, ஆக்கம் ஒன்றைத் தந்து, அதனை ஆழ்ந்தாய்ந்து அணிந்துரை தருமாறு என்னை வேண்டிக்கொண்டார் ஆசிரியர்.

அவ்வாக்கத்தினைப் பல நாட்கள் படித்துப்பார்த்துப் பல விடயங்களை அறிந்துகொள்ளக் கூடியதாகவிருந்தது. அதற்கு அவர் கொடுத்துள்ள தலைப்பு, "தனித்துவம்" என்பது, இவ்வார்த்தை கூட ஒரு தனித்துவமான பாணியில் அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது!

அதற்கேற்ப, இந்நூலின் ஆரம்பம் முதல், இறுதிவரை தனித்துவமாகவே காணப்படுகின்றது.

"தனித்துவம்" என்பது பொற்கொல்லனிடம் பேரம்பேசி - ஆடர் கொடுத்துச் செய்தெடுக்கும் ஆபரணமுமல்ல; பாராளுமன்றத்தில் விவாதித்து இறக்குமதி செய்யும் பொருளுமல்ல; மாறாக, மனிதன் மனிதனாகச் சிந்தித்து, செயல்பட்டு, ஆண்டவனைப் பயந்து அமல் செய்வதன்மூலம் அடையப்பெறும் ஒன்றுதான் அது!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று, நூலாசிரியர், ஆணித்தரமாக எடுத்துறைந்திருப்பது, என்னை மிகவும் கவர்ந்த ஒரு கருத்தாகும்!

மேலும் -
"ஆலயங்களில் தனித்துவம்" என்ற தலைப்பானது, பல சமய, கலாச்சாரப் பண்பாட்டுச் சூழலில் வாழும் முஸ்லிம்கள் தங்களது தனித்துவத்தை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதை விளக்குகின்றது; இவ்விடயம், பொதுப்பதவிகளில் அமர்ந்திருக்கும், எமது பெரும்புள்ளிகள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஒரு அறிவுரையாகும்!

மாற்று மதத்தினரோடு பழகும் எம்மவர்கள், அவர்களைக் கொச்சைப் படுத்தாமல், திருப்திப்படுத்துவதோடு, - அதேவேளை, தம் கலாச்சார, பண்பாட்டுத் தத்துவத்தை இழந்திடாமல் பாதுகாத்துக்கொள்வதற்கும் இந்நூல் வழிகாட்டுகிறது!

அடுத்து -
"நாட்டுப்பற்று" என்ற தலைப்பை எடுத்துக்கொண்டால், ஒரு முஸ்லிமுடைய வாழ்வில் அது எந்த அளவு பின்னிப் பிணைந்து - இழையோடியுள்ளதாக விளங்குகிறது என்பதை - இதுகாலவரை வேறெந்த நூலிலும் காணப்படாதவாறு இந்நூலில் ஆணித்தரமாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது!

அவைபோன்று -
கையிடை என்னும் லஞ்சம், வீண்விரையம், உழைப்பு, மதமாற்றங்கள், வணக்கம், அருளும் பொருளும் தெளிவுரை, இலட்சிய நோக்கோடு வாழும் வழி - போன்ற தலைப்புக்களில் காணப்படும் விஷயங்கள் மிகப் பிரமாதம்!

இறுதியாக ஒன்றை நான் அழுத்திக்கூறக் கடமைப்பட்டவனாக உள்ளேன்.

நம்மவரிடத்திலும் சரி, மற்றவரிடத்திலும் சரி, அரசியல்பற்றி முன்னுக்குப்பின் முரணான - மனிதகுல வாழ்வைச் சீரழிக்கவல்ல - திசைமாற்றப்பட்ட கருத்துக் குழறுபடிகள் மலிந்துள்ள இக்காலையில் -

அரசியல் ஓர் இபாதத்; அது சாக்கடையல்ல!
என்ற தலைப்பானது, சகல சமய மக்களுக்கும் பயன்தரவல்லது!

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் அரசியல் என்பது எப்படிப்பட்ட ஓர் உன்னத இஸ்தானத்தை வகிக்கின்றது என்பதை நூலாசிரியர் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலைப்பானது ஐந்து உப தலைப்புக்களைக் கொண்டுள்ளது.

இவ்வாக்கம் நமது நாட்டுக்கும், நமது சமுதாயத்துக்கும், பிற சமுதாயங்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பது எனது துணிபு!

நாட்டுக்கும், நமது சமுதாயத்துக்கும் நல்ல பல ஆக்கங்களைப் பல்லாண்டுகளாகத் தந்து வரும் பன்னூலாசிரியர் அவர்களின் சேவை மேலும் வளர வல்ல நாயனை வேண்டுகிறேன்.

**இவ்வண்ணம்**
**இஸ்லாமியப் பணியில்**
**மௌலவி. நௌபர் அமீன் (வாஹித்)**

**கல்முனை.**
01-12-1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அகில லோகங்களின் அரசன் -
அண்ட சராசரங்களின் ஆட்சியாளன்;
அருளாளன்; அன்புடையோன்,
அல்லாஹ்வின் திருநாமம் கூறி,
அவனைப் போற்றித் துதித்து,
அழியாத அறநெறிகள் - மார்க்கமதைக் கூறி,
அவனிபுகழ் சமுதாயம் உருவாக்கி
அஹிம்சைபூர்வமான தனித்துவம் காத்திட்ட,
அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள்மீதும்,
அஹ்லேபைத்துக்கள் மீதும்
அவர்கள் வழி பிசகாது,
அவர்களது இறுதிக் காலம்வரை நிலைத்திருந்த
அன்புத் தோழர்களான சஹாபாக்கள்மீதும்,
அகம் கெழுமிய ஸலவாத்தும் சலாமும் உரைத்து,
அகிலத்தில் சத்தியம் காத்து, தனித்துவம் பேணிய
அவுலியாக்கள் - மகான்கள் - இமாம்கள்,
அனைவரையும் வாழ்த்தி - நினைவுகூர்ந்து,
அடியேன், என்னுரையைத் துவங்குகிறேன்!
ஆழ்ந்த கன்ற அறிவுலகில்
ஆழம்காண முடியாத இஸ்லாமியத் தத்துவங்களை
ஆசைமிகுதியால் எழுதுகிறான் இவ்வடியானும்
ஆண்டவனே! உன் மார்க்கத்தை
ஆழ்ந்தறிந்த ஆய்வாளனல்ல இவ்வேழை
ஆனாலும் உன் மார்க்கத்தின்மீது கொண்ட
ஆவலால், அடியேனும் எழுதுகிறேன்!
ஆத்தவாக்கியம்,* முற்றுமுழுவதுமாகப் புரியாத எனக்கு,
ஆதரம் மிகுந்து, பிழையிருப்பின் பொறுத்தருளி,
ஆலம்பம் தந்து காத்தருள்வாய் - என
இறையோனாகிய உன்னை இறைஞ்சியோனாக

---

* ஆத்தவாக்கியம் - வேதசாஸ்திரங்கள், ஆதரம் - அன்பு, ஆலம்பம் - புகலிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாக்கத்தினை - என்
இதயம் கொழுமிய ஆர்வலர்கள்முன்
இரமிந்தலோடு சமர்ப்பிக்கிறேன்.
இரம்மியம் பெறுவர் என்ற பேருணர்வுடன்!
இவ்வாக்கத்தினை எழுத ஆரம்பிக்கிறபொழுது
இப்பணியினைத் திறம்பட -
இனிது நிறைவேற்றுவேனா - எனும்
இதயத் துடிப்பிருந்தது எனக்கு,
இறையோனின் கருணையில்
இலக்கு வைத்தவனாக
இருத்தினேன் பேனாவை - அந்த
இறையருளால் எழுதி முடித்தேன்
இட்டமுடன் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!
ஈரொட்டுடைய இம்மையில் -
ஈர்ங்கதிர்போன்று பிரகாசம் தருவது வாசிப்பு
ஈண்டு நீர் போன்றது கல்வி - அதனை
ஈட்டினோர் ஈண்டையில் மட்டுமல்ல - நாளை மறுமையிலும்
ஈடேற்றம் பெறுவர்!
ஈந்துவக்கும் இனிய நண்பர்கள்.
ஈரநெஞ்சுடைய வர்த்தகர்கள்.
ஈஞ்சுகை சிவந்திட்ட கொடை வள்ளல்கள்
ஈடனையோடு வாங்கிப் படிக்கும் வாசகர்கள்
ஈரிய குணங்கொண்ட அன்பர்கள் - எல்லோருக்கும்
ஈதா வென வுவந்தளிக்கின்றேன் நன்றிகள் பல!
ஈந்தமிழில் இன்னூலை ஆக்கி -
ஈறாந்தம்வரை, தமிழ்கூறும் நல்லுலகில்
ஈகம் போன்று வாசம் கமழ்ந்திட
ஈங்கண் சமர்ப்பிக்கிறேன்!

---

| | | |
|---|---|---|
| இரமிந்தலோடு - மகிழ்ச்சியோடு | ; | ஈதா - இதோ |
| இட்டமுடன் - விருப்பமுடன் | ; | ஈந்தமிழ் - குளிர்ந்த தமிழ் |
| ஈரொட்டு - நிச்சயமின்மை | ; | ஈறாந்தம் - இறுதிக்காலம் |
| ஈர்ங்கதிர் - சந்திரன் | ; | ஈண்டுநீர் - கடல் |
| ஈடனை - ஆசை | ; | ஈண்டையில் - இங்கு |
| ஈகம் - சந்தண மரம் | ; | ஈங்கண் - இவ்வாறு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னயமிக்க சிறப்புரை தந்தது
உண்மைத் தோழர் முஹம்மது ஆதம் - B.Com
உவப்புடன் அணிந்துரை வழங்கிய -
உற்ற நேயர், மௌலவி, நௌபர் அமீன் (வாஹிதி)
உற்சாகத்தோடு திறம்பட அச்சிட்டு வழங்கிய -
உத்தரவாதமுடைய இளம்பிறை ஆப்செட் நிறுவனத்தினர்
உவித்தல்* கொடுத்து ஊழியர்களை ஊக்குவித்து - இதனை
உருவாக்கிய நிறுவன அதிபர் முஹம்மது சாலிஹ் ஹாஜியார்.
உளம் கொண்டுழைத்த கலைவிற்பன்னர் ஜீவா.
உருவம் அமைத்து - டைப் செட்டிங் செய்த ஜன்னா நிறுவனத்தினர்
உளத்திருப்தியோ டுழைத்த ஊழியர் அனைவருக்கும் - எனது
உளங்குளிர்ந்த நன்றிகள் பல உரித்தாகுக!

கல்முனை - ஹாஜி உஸ்மான் சாஹிப்
ஹி. 1419, ரமழான் 12
01-01-1999

---

* உவித்தல் - அறிவித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவம் (01)

தனித்துவம் பேணும் மக்களுக்குத் தாஹாநபியின் முன்மாதிரி:

அதனை அல்லாஹ்வே தன் திருமறையில் எடுத்துக்கூறி, அவ்வாறே நடந்து கொள்ளும் படியும் கட்டளையிடுகிறான்.

அபூஜஹ்ல்,ஆஸ்பின்வாயில், வலீத்பின் முஙைறா முதலான குறைஷிப் பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து, நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையான அப்பாஸ் அவர்கள் மூலம் பெருமானாருக்குச் செய்திகள் அனுப்பினார்கள்:

"நம்முடைய தெய்வங்களையும், அவைகளுக்கு நாங்கள் வணக்கம் செலுத்துவது பற்றியும், முஹம்மது தவறாகப் பேசக்கூடாது! (அதற்குக் கைமாறாக)

"இந்தச் சமுதாயத்தின் தலைமைப்பதவி வேண்டுமா; அதனையும் தருகிறோம்!
"பெரும் பொருள் தேவையா; அவற்றையும் அவர் காலடியில் குவிக்கிறோம்!

"அவர் அழகிய பெண்ணை விரும்பினால் நம்குலத்திலேயே அதிசிறந்த - அழகிய பெண்ணை மணமுடித்துவைக்கிறோம்!"

- இவைதான் அவர்கள் சொல்லி அனுப்பிய செய்திகள்.
இவற்றினைக் கேட்டதும் -

"இவையொன்றுமே எனக்குத் தேவையில்லை; எனது சகோதரர்களாகிய நீங்கள் கேவலமான முறையில் நாசமடையாமல் - புத்திஜீவிகளாகி நேர்வழி பெற வேண்டும் என்பதே எனது ஆசை" எனத் தெிவித்துவிட்டார்கள்!

இந்தத் தந்திரம் பலிக்காமல் போகவே, குறைஷிகள் இன்னுமொரு யுக்தியைக் கையாண்டனர் :
அது என்ன?

அதுதான், இன்று நம்நாட்டிலும் நடைபெறுகிறது, பெரும்பெரும் முக்கியஸ்தர்களும் முழங்கி வருகிறார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்று எங்கட சாமிக்கு நீங்க சாஷ்டாங்கம் செய்தா; நாளை உங்கட சாமிக்கு நாங்க சாஷ்டாங்கம் செய்வோம்!"

என்று அப்பெரிய மனிதர்கள் கூறுகிறார்கள்!

இதை ஏன் அவர்கள் சொல்கிறார்கள் என்றால், இன ஐக்கியம் ஏற்படுவதற்கு அதுதானாம் சிறந்த வழி!

தமிழர்கள் சிங்களத்தையும், சிங்களவர் தமிழையும் கற்றால், மொழிப் பிரச்சினை தீர்ந்துவிடுமென்று - கடந்த காலங்களில் அரசியல் வித்தகர்கள் அலம்பினரே, அது என்னவாயிற்று?

இன்றைக்குக் கணிசமான சிங்களவர் தமிழையும், தமிழ்ப் பேசுவோர் சிங்களத்தையும் கற்றுத் தேர்ந்துள்ளனர். இருந்தும் மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதா? முன்பிருந்ததைவிட, இப்பொழுதுதான் அப்பிரச்சினை அதிகமாகக் கொழுந்துவிட்டெரிகிறது.

அதேபோன்று, முஸ்லிம்கள் தவிர்ந்த மற்றெல்லாச் சமுதாயத்தாரும் - மதத்தாரும், பலமத வணக்க முறைகளையும் சமய சந்தர்ப்பங்களுக்கேற்பச் செய்துதான் வருகின்றனர்!

இதனால் என்ன, சமய சௌஜன்யம் ஏற்பட்டுவிட்டதா?

குறிப்பாக -

சித்தாத்தர் ஹிந்துக்கள் மத்தியில் - ஹிந்து சமயத்தில் பிறந்து, பிராமணீயக் கொடுமைகளுக்கெதிராகக் குரல் எழுப்பியதன் மூலம் ஒரு புதிய மதம் உருவாயிற்று!

அதுதான் பௌத்த மதம்; இம்மதத்தைச் சார்ந்தோரால் ஹிந்து சமயக் கடவுளர்களும் வணக்கத்திற்குரியவர்களாக மதிக்கப்பட்டு, மகிமைப் படுத்தப்பட்டு வருகின்றனர்.

அவ்வாறான ஒற்றுமை, அவ்விரு சமுதாயங்களிலும் இருந்தும்கூட மதமாச்சரியங்கள் குறைந்தனவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
REFERENCE

கிருஸ்தவ மத இஸ்தாபகர் என்று - ஒரு சாராரால் கருதப்படுகின்ற இயேசுநாதர் (ஈஸா - அலை) அவர்களையும், யூதர்கள் மத்தியில் தோன்றிய தீர்க்கதரிசிகளான நபிமார்களையும், இஸ்லாத்தினுடைய திருமறை - அல்குர்ஆன் மிக்க கண்ணியத்தோடு எடுத்துக் கூறுகிறது; அவர்களுடைய சரித்திரத்தை அழகுபட விரித்து விளக்குகிறது!

அப்படியிருந்தும் கிருஸ்தவர்களும், யூதர்களும் அந்தக் குர்ஆனை ஏற்றுக்கொள்ளவில்லையே!

கிருஸ்தவ, யூத மதத் தலைவர்களின் நாமம் உச்சரிக்கப்படுவதைக் கேட்டவுடனேயே, முஸ்லிம்களின் உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிந்து - புத்துணர்வு பெற்று - அவர்களை அறியாமலேயே, அவர்களது நாவுகள், "அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம்" என்று வாழ்த்துக் கூறுகின்றனவே!

அவ்வாறிருந்தும் யூத - கிருஸ்தவ உலகம்தானே, இவ்வுலகில், காலங்காலமாக முஸ்லிம்களுக்குத் தொல்லைகள் தந்துவருகின்றது!

அப்படியானால் மேலும், மேலும் தொடர்ந்து, இந்தக் கலப்படக் கலாச்சார முறையை - அல்லது கலப்பட மொழி வழிமுறையைக் கூறிக்கொண்டு வருவதில் என்ன பிரயோசனமுள்ளது? *

வணக்க முறைகளிலும், கலாச்சாரத்திலும் கலப்படம் செய்வதன்மூலம் ஒற்றுமையோ, உலக சமாதானமோ தோன்றிடாது; அவ்வாறு நடந்ததாக வரலாற்றிலேகூட சான்றுகள் இல்லை! மாறாக, அவ்வாறு சமய கலாச்சார மொழி விடயங்களில் கலப்படம் செய்வதால் பிரசினைகள் மேலும் உக்கிரமாகி மத - இன - மொழி மாச்சரியங்களே பல்கிப் பெருகும் என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் பலவுள!

---

* முஸ்லிம்கள், யூதர்கள், கிருஸ்தவர்கள் விடயம் வேறு, ஏனெனில் யூத, கிருஸ்தவ மத இஸ்தாபகர்களாக - அவர்களால் கருதப்படுவோர் நபிமார்களாக இருக்கின்ற காரணத்தினாலே, எந்த வேளையிலும் அந்த மத போதகர்களை, முஸ்லிம்கள் ஓர் ஆர்ப்பளவேனும் தரக்குறைவாக மதித்துவிடக் கூடாது எனக் குர்ஆனால் கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு கேவலமாக நபிகள் நாயகத்தை வர்ணித்துப் பேசி - எழுதியபோதிலும் சரியே! சல்மான் ருஷ்தியும், பங்களாதேஷ் தஸ்லீமா நஸ்ரீன் போன்றோர்களும் யூத - கிருஸ்தவ உலக சிருஷ்டிகளாகும் என்பதும்; அவர்களுடைய நாடுகளிலேயே இவர்களுக்குத் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதும் இங்கு எடுத்துக்காட்டப் படவேண்டியனவாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக -

மதநம்பிக்கைகளில் கலப்படம் செய்வதினாலோ,
பல மொழிகளைப் புரிந்து கொள்வதினாலோ,
சமய சகிப்புத்தன்மை வளர்ந்திடாது;
மொழிப் பிரச்சினையும் தீர்ந்திடாது!
மனிதர்களுக்கு மாபெரும் தலையிடியைக் கொடுத்து,
வேதனைகளையும், இழப்புக்களையும் தந்து வருகிற,
இன - மத - ஜாதிப் பிரச்சினைகள் தீர்ந்திடவேண்டுமானால்,
இந்த உலகத்திலேயே ஒரேயொரு வழிதான் உண்டு!
அதனை விடுத்து வேறெந்த நடைமுறையும் கிடையாது
அதுதான் -
முஸ்லிம்கள் உண்மை முஸ்லிம்களாக -
ஹிந்துக்கள் சிறந்த ஹிந்துக்களாக -
பௌத்தர்கள் நல்ல பௌத்தர்களாக -
கிருஸ்தவர்கள் பரிபூரணக் கிருஸ்தவர்களாக -
மதமற்ற நாத்திகர்கள் - தாம் விரும்பும்,
ஏதாவதொரு மதத்திற்குத் திரும்பியவர்களாக - *
அவரவர் விரும்பும் - பின்பற்றும்
மத நம்பிக்கைகளைப் பூரணமாகத் -
தத்தமது வாழ்க்கையில் அனுஷ்டித்து நடத்தலாகும்!

ஒவ்வொரு மதத்தினருக்கும், தாம் விரும்பும் மார்க்கத்தைப் பின்பற்றி ஒழுகவும், பிரச்சாரம் செய்யவும் உரிமையுண்டு; அஃது அவரவரின் பிறப்புரிமையுமாகும்!

இந்த மாபெரும் உண்மையை அன்று, அந்த இக்கட்டாகிய வேளையில், எல்லாம்வல்ல இறைவன் தன் இறுதித் தூதருக்கு எடுத்து விளக்கிவைப்பதைப் பாருங்கள் -

---

* - ஏனெனில் -

மதமற்றவன்; இயற்கைக்கு மாறுபட்டவன்!
கடவுள்மீது நம்பிக்கையில்லாதவன்; தன் வாழ்வு மீதே நம்பிக்கையிழந்தவன்!
ஆண்டவன்மீது விசுவாசமில்லாதவன்; மனிதர்களை நேசிப்பதெங்கனம்?
இறைவன் மீது விசுவாசமில்லாதவன்; அக்கிரமக்காரன்!
இறைவிசுவாசி எனக்கூறி நடிப்பவன்; மகா அநியாயக்காரன்!!
சந்தர்ப்பத்திற்கேற்பத்தாளம் போடுபவன்; மகா, மகா, மோசடிக்காரன்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கூறுவீராக!
ஓ, நிராகரிப்பாளர்களே!
நீங்கள் எவற்றை வணங்குகிறீர்களோ;
அவற்றை நான் வணங்குவதில்லை!
நான் யாரை வணங்குகின்றேனோ;
அவனை நீங்கள் வணங்குபவர்கள் அல்லர்!
மேலும்,
நீங்கள் வணங்கியவற்றை;
நான் வணங்குபவன் அல்லன்!
நான் யாரை வணங்குகின்றேனோ;
அவனை நீங்கள் வணங்குகின்றவர்கள் அல்லர்!
உங்களுக்கு உங்களுடைய மார்க்கம்;
எனக்கு என்னுடைய மார்க்கம்!' - அல்குர்ஆன் 109 : 1 - 6

இந்த அறிவிப்பு ஆரம்பத்தில் குறைஷிகளை நோக்கி, அவர்களுடைய - கெட்ட சதியை உள்ளடக்கிய சமரசத் திட்டங்களுக்குப் பதிலாகக் கூறப்பட்ட போதிலும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட - ஒத்துவராத கொள்கைகள் விடயத்தில், முஸ்லிம்கள் எப்படி நடந்துகொள்ளல் வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது!

அப்படி ஒளிவு மறைவின்றி உண்மையை உள்ளவாறு, பல தெய்வ வணக்கத்தினருக்கு எடுத்துக் கூறுவதன் மூலம்தான் முஸ்லிம்கள் தங்கள் தனித்துவத்தைப் பேண முடியும் என்பதற்கும் இந்த சூறா ஓர் அறிவுறுத்தலாகவும் இருந்துவருகிறது!

இந்த உலகத்தில் இறுதிநாள் வரைக்கும் தோன்றக்கூடிய எல்லா முஸ்லிம்களுக்கும், இவ்வாறு - முனாஃபிக் தனமற்ற முறையில் நடந்து தங்களது தனித்துவத்தைக் காத்துக் கொள்ளல் வேண்டும் என இந்த சூறாவின்மூலம் எச்சரிக்கப்படுகிறது!

மேலும் இந்த சூறாவில் சர்வ சமய சகிப்புத்தன்மை எடுத்துக்கூறப்படும் அதேவேளை, முஸ்லிம்களின் தனித்துவம் (ஈமான்) தகர்ந்துவிடாது பாதுகாத்துக் கொள்ளுமாறும் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது!
அதாவது -
ஓரிறை நிராகரிப்புக் கொள்கை, எங்கு எந்த வடிவத்தில் இருந்தாலும், முஸ்லிம்கள் அதனை விட்டு விலகி இருப்பதைத் தம் சொல்லாலும், செயலாலும் அறிவித்துவிடல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமல் இல்லாமல் தனித்துவமில்லை (02)

முஸ்லிம்களைப் பொறுத்தவரை தனித்துவம் என்பது "ஈமான்" ஆகும்! சிலர் சொல்வதுபோல - பலர் நினைப்பதுபோல, முஸ்லிம்கள் தனிப் பிரதேசத்தில் - தனிக் குழுவாக - ஆட்சி அதிகாரங்களில் சில பிரதிநிதித்துவங்களை மட்டும் பெற்றுக்கொண்டு - வெறும் கோஷங்களையும் எழுப்பிக்கொண்டு, சிலுசிலுப்புக் காட்டுவது மட்டுமல்ல; மாறாக, ஈமானின் அம்சங்களைச் செயல்படுத்துவதும், முஸ்லிமல்லாதாருக்கு அவற்றின் மகிமைகளை எடுத்து விளக்குவதுமாகும்!

ஆக, "தனித்துவம்" என்பது, "இபாதத்" ஆகும்!

இன்றைக்கு, முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழுகின்ற நாடுகளிலெல்லாம், ஆங்குள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் பதவிபெறப் பயன்படுத்தும் வார்த்தை - கோஷம், முஸ்லிம்களின் தனித்துவம் பற்றியதாகவே அமைந்திருக்கிறது!

"அமல்" இல்லாமல் தனித்துவம் எவ்வாறு உருவாக முடியும்? "அமல்" இல்லாமல் தனித்துவம் பற்றிப் பேசுவதும், எழுதுவதும் ஒரு கேலிக்கிடமான செயலாகும்!

இவர்கள், முஸ்லிம்களின் தனித்துவம் என்றால் என்னவென்று நினைத்துக்கொண்டார்களோ தெரியவில்லை!

அ∴தென்ன சந்தையில் காணப்படும் சரக்கா? பேரம் பேசிப் பெறுவதற்கு!

அல்லது -

வெளிநாட்டுப் பொருளா? பாராளுமன்றத்தில் வாதிட்டு இறக்குமதி அனுமதி பெறுவதற்கு!

அல்லது -

பொற்கொல்லனின் பட்டறையில் உருவாகும் ஆபரணமா? பணத்தைக் கொடுத்து வாங்குவதற்கு!

ஆதலால் -

கொஞ்சம் ஆழமாக - உட்புகுந்து சில கருத்துக்களை இங்கு விரித்து - விளக்கிவைக்க வேண்டியது அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலுள்ள -

ஓரிறை நிராகரிப்பாளர்களெல்லாம், ஏதோ பல்வேறுவிதமாகப் பல தெய்வங்களில் நம்பிக்கை பூண்டிருக்கையில், அந்த எல்லாத் தெய்வங்களையும் நிராகரித்துவிட்டு, அண்டசராசரங்களையெல்லாம் படைத்தாளும் சர்வவல்லமை பொருந்திய அல்லாஹ்வை மட்டும் முஸ்லிம்கள் நம்புகிறார்களே, அது அவர்களுடைய தனித்துவம்!

உலகத்தினரெல்லாம் -

ஏதோ ஒவ்வொரு வகையில் - சம்பிரதாயபூர்வமாக இறை வணக்கம் புரிந்து கொண்டிருக்கையில், தினமும் தவறாமல் ஐவேளை - குறிப்பிட்ட நேரங்களில் இறைவனை முஸ்லிம்கள் தொழுது வருகிறார்களே; அது அவர்களுடைய தனித்துவம்!

உலகிலுள்ள -

பல தெய்வ நம்பிக்கையுடையோரெல்லாம், ஏதோ ஒவ்வொரு வழியில் தான தருமங்களைச் செய்து வருகையில், ஒவ்வொரு வருடமும் தம் சொத்துக்கள் , பொருட்களைக் கணக்குப் பார்த்து விகிதா சாரப்படி, "ஸகாத்" கொடுப்பதோடு அதனை அரசியல் லாபம் தேடியோ, பெருமையை நாடியோ, உலக நலன்களைஉத்தேசித்தோ அல்லாமல் - தூய்மையுடன் நிறைவேற்றி வருகிறார்களே உண்மை முஸ்லிம்கள்; இஃது அவர்களுடைய தனித்துவம்!

மாநிலத்திலுள்ள -

மாற்று மதத்தினரெல்லாம் ஏதோ, வெவ்வேறு விதமாக விரதம் அனுஷ்டித்து வருகையில், ரமழான் மாதத்திலே நோன்பிருந்து - ஒரு மாதத்தைப் பூர்த்தி செய்து வருகிறார்களே முஸ்லிம்கள்; இஃது அவர்களுடைய தனித்துவம்!

அகிலத்திலுள்ள -

அனைத்து மதத்தினரும் ஏதோ, ஒவ்வொரு வழியில், பல்வேறு புண்ணியஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று வருகையில் பணபலமும், உடற்பலமும், பிரயாண வசதிகளும் வாய்க்கப் பெற்ற முஸ்லிம்கள் - இந்த உலகத்தின் நடு மத்தியில் (மையப்புள்ளியில்) அமைந்திருக்கின்ற, புனித கஃபத்துல்லாஹ்வுக்குச் சென்று வருகிறார்களே இஃது அவர்களுடைய தனித்துவம்! *

---

* ஆயுளில் ஒருமுறை அங்கு சென்று வருவது வசதி படைத்தோருக்குக் கட்டாயக் கடமை; மேற்கொண்டு செல்வது சிறப்பு! ஆனால், அதில் உலகாயத நோக்கு இருத்தலாகாது; உண்மை முஸ்லிம்கள், அவ்வாறு செய்யமாட்டார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாவற்றிலும் (03)

இப்பூமியிலுள்ள -

ஜனங்களில் ஒரு சாரார் இனவாதம், மதவாதம், மொழிவாதம் - குல கோத்திரத்தோஷங்களையெல்லாம் உருவாக்கிக் கொண்டிருக்கையில், அவற்றினை அழித்திட அயராதுழைப்பது முஸ்லிம்களது பொறுப்பு என உணர்ந்து - அல்குர்ஆன், அல்ஹதீஸ் ஆகியவற்றினது கருத்துக்கள் எனக் கண்டு, அதற்காக அவர்கள் பாடுபடுவது தனித்துவமாகும்!

குவலயத்திலுள்ள -

மனிதர்களெல்லாம் அவரவர் விருப்பப் பிரகாரம் - மனம்போன போக்கில் - யாதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாது ஜனநாயகம், முதலாளித்துவம் * சோஸலிசம், கம்யூனிஸம் என்ற போலித்தனமான தத்துவங்களின் அடிப்படையில், தத்தமது நாட்டை வழிநடத்த முற்படும்வேளை அவற்றையெல்லாம் - அவற்றிலுள்ள தீமைகளையெல்லாம் விரித்து விளக்கி - எடுத்துக்காட்டி அரசியலிலும் அல்லாஹ்வின் சட்டமே இடம்பெறல் வேண்டும், இறைச் சட்டத்துக்கு மட்டுமே இவ்வுலக மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, அமைதி காத்திடும் வல்லமையுண்டு என எண்பிக்க வேண்டியது முஸ்லிம்களது - அவர்களுக்கிடையேயுள்ள அரசியல்வாதிகளது கடமை; இ∴து அவர்களின் தனித்துவம்!

மண்ணகத்திலுள்ள -

மானிடர்களில் பலர் ஆண், பெண் என்ற வித்தியாசமின்றிக் கலந்துறவாடிக் களிநடனம் புரிந்து, காலத்தையும் வீணாக்கி, இயற்கை மீறிய நடத்தையால் இவ்வுலகையே பாழ்படுத்திக்கொண்டிருக்கையில் - ஆண், பெண் அந்தஸ்துப் பேணி, அவரவர் ஒழுக்க வரம்பு காத்து, உலகை உயர்த்திட வேண்டியது முஸ்லிம்களது கடமை; இ∴து அவர்களது தனித்துவம்!

அகிலத்திலுள்ள -

அதிகாரப் பதவிகளில் அமர்ந்திருப்போரிற்சிலர் இலஞ்சத்திலும், ஊழலிலும்உழன்று, தாமும் கெட்டு - தம் சூழலில் வாழ்வோரையும் நாசப்படுத்தி, உலகோரையும் சீரழித்துக்கொண்டிருக்கையில் - ஊழலினதும், இலஞ்சத்தினதும், குடியினதும் கொடுமையை எடுத்துக்கூறிக் குவலயத்தின் நலன் காக்கவேண்டியது முஸ்லிம்களது கடமை; இ∴து அவர்களது தனித்துவம்!

---

* "ஜனநாயகம்" என்பதற்குப் பசப்பு வார்த்தைகள் பல கூறி மழுப்பலாம், ஆனால், அதுவும் ஒரு முதலாளித்துவம்தான்! ஒருவாக்கு வித்தியாசத்தில் நல்லதைக் கெட்டதாகவும், கெட்டதை நல்லதாகவும் - நீதியை அநீதியாகவும், மோசடி, இலஞ்சம், காமம் முதலானவற்றை மாபெரும் சமூக சேவைகளாகவும் நிரூபித்துவிடக்கூடிய சக்தி இந்த ஜனநாயகத்திற்கு உண்டு! ஐந்து அறிஞர்கள் இருக்கும் இடத்தில், ஆறு அயோக்கியர்கள் வந்து கலந்து கொள்வார்களானால், அந்தக் காலிகளின் - கூலிகளின் - காடையர்களின் கைதான் ஓங்கும்! இதுவே ஜனநாயகம் என்பது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகத்திலுள்ள -

வயது வந்த ஆண்களிலும், பெண்களிலும் அதிகமானோர் சந்திக்கின்றபோது கைலாகு கொடுத்து - முகமன் கூறித் தத்தமது உணர்வுகளுக்குச் சூடேற்றிக் கொண்டிருக்கையிலே, உண்மை முஸ்லிம்கள் மட்டும், "வயதுவந்த அன்னிய ஆண்களும், பெண்களும் கைகளைப் பிடித்துவந்தனம் கூறுவது எங்கள் வழியல்ல; நாகரிகமுமல்ல" என்று கூறி, வாயால் வாழ்த்துச் சொல்கிறார்களே; இஃது அவர்களுடைய தனித்துவம்! *

பார்மீதுள்ள -

பாவையர் பல்லோரின் பாவாடைகள், புடைவைகள் எல்லாம் நாளுக்குநாள், நிமிடத்துக்கு நிமிடம் - அங்குலம், அங்குலமாகக் குறைந்து, கால் நிர்வாணம், அரை நிர்வாணம் என்று முழு நிர்வாணத்துக்கே வந்துவிட்ட இக்காலை, முஸ்லிம் பெண்கள் உச்சிமுதல், உள்ளங்கால்வரை நிறையாடை (ஃபர்தா) அணிந்து, பெண்ணினத்தின் பெருமை பேணி வருகிறார்களே; இஃது அவர்களுடைய தனித்துவம்!

அவனியில் -

பொய்யும், புழுகும், புரட்டும் மலிந்திருக்கையிலே உண்மை பேசி, உயர் நாமம் (அல்லாஹு அக்பர்) உரத்து முழங்கி, உலுத்தர்களையெல்லாம் நேர்வழிப்படுத்த எத்தனிக்கிறார்களே, உண்மை முஸ்லிம்கள்; இஃது அவர்களுடைய தனித்துவம்!

அகிலத்தினிலே -

அமைதி, சுபீட்சம், ஒழுங்கு, கட்டுப்பாடு என்பன நிலவ இஸ்லாமிய ஆட்சி (இறையாட்சி) யே உகந்தவழி - உலகிலே, ஏற்கனவே அமுல்படுத்தி - பரீட்சார்த்தமாக வெற்றி கண்டவழி - பிற்காலத்தில், பிற்போக்குவாதிகளால், பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டு - முஸ்லிம்களின் சிந்தனைகளை மயக்கியதன் வாயிலாய் மறக்கப்பட்டு - மறைக்கப்பட்ட வழி, அதுவே இப்பொழுது அவனிக்குத் தேவை, எனக்கூறி - அடாவடித்தன, அகங்காரவாதிகளை எதிர்த்துப் போராடும் மக்களை, "அடிப்படைவாதிகள்" என்று நாமகரணம் சூட்டியுள்ள இந்த வேளையிலே, "ஆம்! அடிப்படைவாதமே எமது பேச்சும், மூச்சும்" எனக் குரல் எழுப்பித் தமது ஒவ்வொரு மூச்சினையும் தியாகத்தின் (ஜிஹாத்) வழியில் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்களே உண்மை முஸ்லிம்கள்; இஃது அவர்களது தனித்துவம்!

---

* அரபுநாடுகள், மற்றுமுள்ள முஸ்லிம் நாடுகளின் அரசியல் தலைவர்கள் - ஜனாதிபதிகள், தனாதிபதிகள், விடுதலை இயக்கத்தலைவர்கள் - உள்நாட்டிலுள்ள முக்கியஸ்தர்களெல்லாம் ஆண், பெண் வித்தியாசமின்றிக் கைகொடுக்கின்றார்களே? என்று வாசகர்கள் கேட்கலாம். அதற்கு ஒரேயொரு நேரடியான விடை : அவர்கள் அவ்விடயத்தில் இஸ்லாத்தின் சட்டத்தை மீறுகிறார்கள்!" என்பதுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் தனித்துவம் (04)

பல்லின மக்கள் வாழும் நாட்டிலே, பொதுப் பதவிகளில் - பொறுப்பான பதவிகளில் அமர்ந்துள்ள முஸ்லிம்கள் - ஏதாவதொரு நிகழ்ச்சிக்காக மாற்றுமத ஆலயங்களுக்குச் செல்ல நேரிட்டால், அங்கு அமைதிகாத்து, பண்பாக நடந்து, அவர்களுடைய மதச் சடங்குகள் முடிந்தவுடனே தலைநிமிர்ந்து வரவேண்டிய முஸ்லிம்கள் - தப்பித்தவறி அவர்களுடைய ஆசாரங்களை - சிறப்புக்காகவேனும் செய்யுமாறு வேண்டிக்கொள்ளப்பட்டால், "இஃது இஸ்லாம் அங்கீகரிக்காத - வெறுக்கின்ற ஒரு காரியம்" என்று எடுத்துக் கூறித் தவிர்ந்து கொள்கிறார்களே உண்மை முஸ்லிம்கள்; இஃது அவர்களுடைய தனித்துவம்!

இவ்விடயம் எம்மவரைவிட மாற்று மத்ததினருக்கு நன்கு தெரியும். வேற்றுமத முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், மற்றும் பிரதானிகள் எத்தனையோ பேர், பொது நிகழ்ச்சிகளுக்காக மஸ்ஜிதுகளுக்கு விஜயம் செய்கின்றனர். அப்பொழுது அங்கே நாட்டு நலன் - பொதுநலன் கருதி துஆக்கள் ஓதப்படுகின்றன. அப்பொழுதெல்லாம் அவர்கள் கையேந்துவதோ, ஆமீன் கூறுவதோ இல்லை; முஸ்லிம்களும் அதனை எதிர்பார்ப்பதுமில்லை!

அவர்கள் துஆவுக்குக் கையேந்துவதோ, ஆமீன் கூறுவதோ இல்லையென்றால் அதற்குக் காரணமென்ன? அஃது அவர்களுடைய சம்பிரதாயம் இல்லை என்பதுதான்!

மாறாக, அவர்கள் என்ன செய்வார்களென்றால், முஸ்லிம்களின் பிரார்த்தனை நிகழ்ச்சிக்கு மதிப்பளித்து, மௌனமாகக் கைகட்டி - அமைதிகாத்து, வைபவத்தைச் சந்தோசமாக நிறைவு செய்கின்றனர்!

அவர்களுடைய கொள்கையில், அவர்களுக்குள்ள "ஈமானி"ன் உறுதியைப் பற்றி நான் மெச்சுகிறேன்!
அவர்கள், அவர்களுடைய மத சம்பிரதாயங்களில் கொண்டுள்ள விசுவாசத்திற்கு நான் மதிப்பளிக்கிறேன்! *

---

* அந்த அளவுக்குக் காபிர்கள் தங்கள் ஈமானில் உறுதியாக உள்ளனர்; ஆனால், எம்மவர்களில் சில பிரமுகர்கள் தாழ்வு மனப்பான்மையினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிகிறபோது, உண்மை முஸ்லிம்களின் நெஞ்சங்கள் புண்ணாகின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் -

மாற்று மதத்தினரை, இஸ்லாமிய சம்பிரதாயங்களைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்க, "ஷரீஆ" - சட்டமும் இடம் தரவில்லை!

"தீனில் (இறைநெறியை மேற்கொள்வதில்) யாதொரு கட்டாயமோ, நிர்ப்பந்தமோ இல்லை"

- அல்குர்ஆன் 2 : 256

'உம் இறைவன் விரும்பியிருந்தால், பூமியிலுள்ள அனைவருமே ஒன்றுபட்டு விசுவாசித்திருப்பார்கள், (எனவே) மனிதர்கள் (யாவருமே) விசுவாசிகளாகிவிட வேண்டுமென்று அவர்களை நீர் நிர்ப்பந்திக்க முடியுமா?'

- அல்குர்ஆன் 10 : 99

இந்த உலகத்திலேயுள்ள - இஸ்லாம் தவிர்ந்த சகல மதத்தினரும் - ஒருவர் மற்றவரின் ஆலயங்களுக்குச் சென்று, சங்கோஜமின்றி - மாறுபட்ட சம்பிரதாயங்களை - கௌரவத்திற்காகச் செய்யலாம். அது அவர்களைப் பொறுத்தவரை பாதகமான செயலல்ல.

ஏனென்றால், அந்தச் சமயங்களெல்லாம் சிலைகளின் முன்னால் வணக்கத்தை நிறைவேற்ற அனுமதிக்கின்றன; அவ்வாறே அவர்களும் நடந்து கொள்கிறார்கள்!

அதனால், ஒரு மதத்தவர் இன்னொரு மதக் கோவிலுக்கு - ஏதாவதொரு தேவை கருதிச் சென்றபோது - அங்கே பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறபோது, ஆங்குள்ள விதமாகவே சம்பிரதாயங்களைக் கடைப்பிடிக்கலாம்!

அதனால், அவர் தன்னுடைய மதத்திலிருந்து மாறுபட்டுவிட்டார் என்றோ, சமூகத்துக்குத் தீங்கு விளைவித்துவிட்டார் என்றோ எண்ண இடமில்லை! ஏனென்றால் அது தற்காலிகமானதே; நிரந்தரமானதன்று!

ஆனால், இஸ்லாத்தைப் பொறுத்தவரை, "தற்காலிகம்" "நிரந்தரம்" என்ற வித்தியாசம் கிடையாது!

ஒரு முஸ்லிம், சிலைகளுக்கு முன்னால் தலைசாய்க்கவோ, மதகுருக்களின் முன்னால் மண்டியிட்டு வணங்கவோ அல்லது சிலை வணக்கக் காரர்களால், அவ்வணக்கத்தை மகிமைப்படுத்தும் விதமாகக் கைக்கொள்ளக்கூடிய ஆசாரங்களை - எதிரில் சிலைகள் இல்லாதிருந்தபோதிலும் செய்தலோ கூடாது; அதனை நியாயப்படுத்தவும் முடியாது - தற்காலிகமாக இருந்த போதினும் சரியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால், அப்படியான கட்டங்களில் முஸ்லிம்கள் தங்கள் மார்க்கத்தின் சட்டத்தை அவர்களுக்கு எடுத்துக்கூறி அதிலிருந்து தவிர்ந்துகொள்ளல் வேண்டும்! இது தனித்துவம்!

'(உங்களில்) சிலரை அவன் நேரான வழியில் செலுத்தியிருக்க, மற்றோர்மீது வழிகேடே விதிக்கப்பட்டதன் காரணம், நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையன்றி, ஷைத்தான்களையே (தங்கள்) தோழர்களாக எடுத்துக் கொண்டதுடன், தாங்கள் நிச்சயமாக நேரான வழியில் இருப்பதாகவும் எண்ணிக்கொண்டதுதான்.' - அல்குர்ஆன் 7 : 33

அல்லாஹ்வோடு போட்டியிட எந்தச் சக்தியால்தான் முடியும்! அப்படி இயலுமென்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

*சிலர் நினைக்கலாம் -*
*'எத்தனையோ பொய், புரட்டுக்களைக் கூறுகிறோம்,*
*எப்படியெலாம் மக்களை மடையர்களாக்குகிறோம்,*
*இலஞ்சம் - மோசடி - துன்புறுத்தல்*
*குற்றவாளியைச் சுத்தவாளியாக்கி;*
*சுத்தவாளியைக் குற்றவாளியாக்கிவிடுகிறோம!*
*அத்தனையும் அடுக்கடுக்காய்ச் செய்கிறோம்;*
*எங்களுக்கு என்ன நேர்ந்தது?*
*ஒன்றுமேயில்லை!*
*எங்களுடைய செயல்களில் நாங்கள்,*
*முன்னேறிக்கொண்டே போகிறோம்!*
*என்று இறுமாந்திருக்கலாம்!*
*ஆம்; அப்படித்தான் கொஞ்சக்காலம் கழியும்!*
*'அரசன் அன்று கேட்பான்; தெய்வம் நின்று கேட்கும்!'*
*என்பது நம்நாட்டுப் பழமொழியல்லவோ!*
*அப்படித் திமிர்பிடித்தோர்,*
*எண்ணிக்கையில்லாத அளவு,*
*வெறிபிடித்தலைந்தனர் இவ்வையகத்தில்;*
*அவர்களையெல்லாம் இம்மண் விழுங்கிவிட்டது!*
*அவர்களது நிலை, இன்று என்னவாயிற்று ?*
*பார்த்து வந்து சொல்வார் யாருளர் ?*
*'கண்டவர் விண்டதில்லை;*
*விண்டவர் கண்டதில்லை!'*
*ஆனால் -*
*அல்குர்ஆன் அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றது!*
*அந்த அறிவுறுத்தலுக்குச் செவிசாய்ப்பதன் வாயிலாய்,*
*நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்!*

PUBLIC LIBRAR
KALMUNAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆனால், (நபியே!) உம் இறைவன், மிக்க மன்னிப்போனும், கிருபையுடையோனுமாக இருக்கிறான். அவர்கள் செய்யும் (தீ) வினையின் காரணமாக அவன், (உடனுக்குடன்) அவர்களைப் பிடிப்பதாயிருந்தால், இதுவரையில் அவர்களை வேதனை செய்தேயிருப்பான். எனினும், (அவர்களைத் தண்டிக்க) அவர்களுக்கு ஒரு தவணையுண்டு. அதற்குப் பின்னர் அவர்கள் தப்ப வழிகாணார்கள்.' - அல்குர்ஆன் 18 : 58

'மனிதர்களை, அவர்கள் தேடிக்கொண்ட (தீ)வினைக்காக (உடனுக்குடன்) அல்லாஹ் தண்டிப்பதாக இருந்தால், பூமியில் யாதொரு (மனித) ஜீவனையும் விட்டுவைக்க மாட்டான்; ஆயினும், அவர்களைக் குறிப்பிட்ட தவணை வரையிலும் விட்டுவைக்கின்றான். அவர்களுடைய தவணை வரும் பட்சத்தில் – (உடனே அவர்களைப் பிடித்துக் கொள்வான்.) நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களை உற்றுநோக்கினவனாகவே இருக்கின்றான்.'

- அல்குர்ஆன் 35 : 45

'அவன் தன் அடியார்களை அடக்கியே ஆள்கின்றான், அன்றி, உங்களுக்குப் பாதுகாப்பாளர்களையும் ஏற்படுத்துகின்றான். அவர்கள் உங்களில் ஒவ்வொருவனையும், மரண (கால)ம் வரும் வரையில் இரட்சித்து, பின்னர் அவனை நம்முடைய தூதர்கள் இறக்கச் செய்கின்றனர். அவர்கள் (குறித்த காலத்திற்கு முன்னரோ, பின்னரோ உயிரைக் கைப்பற்றி) எதுவும் தவறிழைப்பதில்லை.' - அல்குர்ஆன் 6 : 61

'(இதன்பின்னர்), அவர்கள் தங்களின் மெய்யான எஜமானனாகிய அல்லாஹ்விடமே கொண்டுவரப்படுவார்கள். (அந்நேரத்தில்) தீர்ப்புக்கூறும் அதிகாரம் அவனுக்கே உடையது, (என்பதை அவர்கள் அறிந்துகொள்ளட்டும்.) அன்றி அவன் கணக்கைத் தீர்ப்போரிலும் மிகத் தீவிரமானவன்.' - அல்குர்ஆன் 6 : 62

'(நபியே!) எவர்கள் இவ்வுலக வாழ்க்கையால் மயக்கப்பட்டு, தங்கள் மார்க்கத்தை வீண்விளையாட்டாகவும், (வேடிக்கையாகவும்) எடுத்துக்கொண்டார்களோ அவர்களை, (அவர்கள் போக்கில்) விட்டுவிடும். எனினும், 'ஒவ்வோர் ஆத்மாவும் தன் (தீய) செயல்களின் காரணமாக (மறுமைநாளில்) ஆபத்திற்குள்ளாகும்.' என்ற உண்மையை நீர் (அவர்களுக்கு) ஞாபகமூட்டும். (அந்நாளில்) அதற்குப் பரிந்து பேசுவோரோ, உதவி செய்வோரோ அல்லாஹ்வையன்றி ஒருவருமிரார். (பாவிகள் தங்கள் வேதனைக்குப்) பிரதியாக (ச் சாத்தியமான) யாவற்றையும் கொடுத்தபோதிலும், அது அங்கீகரிக்கப்படமாட்டாது. அவர்கள் தங்கள் (தீய) செயல்களின் காரணமாகவே ஆபத்திற்குள்ளானார்கள். அவர்களின் நிராகரிப்பின் காரணமாக, மிகத் துன்புறுத்தும் வேதனையுடன், (குடிப்பதற்குக்) கொதிக்கும் பானத்தையும் அடைவார்கள்.' - அல்குர்ஆன் 6 : 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஊழலும், கையிடையும் கனதியாகி -*
*இன்றைக்கு 'உலகமே அதில்தான் சுழல்கிறதோ? '*
*என்று நினைக்குமாப்போல் -*
*நர்த்தனமாடுகின்றன !*
*பெரிய, பெரிய - மேட்டுக் குடியினர் முதல்,*
*சிறிய, சிறிய - ஆபீஸ்பையன்கள் வரை -*
*பொதி சுமக்கும் கூலியாள் ஈறாக,*
*இந்தக் கொடுமையையே இழைத்து வருகின்றனர்!**

பொதி சுமக்கும் ஆளிடம் - அதற்குக் கூலி மட்டுமல்ல; அத்துடன், 'எதேஷ்டம்' ஏதாவது கொடுத்தால்தான், அந்தப் பொதி உருக்குலையாமல், குறித்த இடம் பத்திரமாக வந்துசேரும்!

இல்லையேல் -

கண்டமாதிரித் தூக்கிப்போட்டு, உருக்குலைத்து அல்லது உடைந்து - முதலுக்கே நஷ்டம் விளைவிப்பர்!

இப்படி உலகமே போய்க் கொண்டிருக்கிற இவ்வேளையில், தாம் பெற்ற பதவி - உத்தியோகம் - தொழில் - எதுவாயிருந்தாலும் அதனை மானிட இனத்திற்குச் சேவையாற்றும் - அன்புத் தொண்டாற்றும் கருவியாகக் கொண்டு, "கையிடை" வாங்காது கருமமாற்றவேண்டியது முஸ்லிம்களது கடமை; இ.்.து அவர்களது தனித்துவம்!

**'அன்றி, நீங்கள் உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரின் பொருள்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள். (உங்கள் கட்சி பொய்யானதென) நீங்கள் அறிந்திருந்தும், (இதர) மனிதர்களின் பொருள்களில் எதனையும் பாவமான வழியில் விழுங்கிவிடும் பொருட்டு (இலஞ்சம் கொடுக்க,) அத்துடன் அதிகாரிகளிடம் செல்லாதீர்கள்.' - அல்குர்ஆன் 2 ; 188**

**'கையூட்டு (இலஞ்சம்) கொடுப்பவரையும், தீர்ப்பளிக்க கையூட்டுப் பெறுபவரையும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் சபித்தனர்.'**

| | | |
|---|---|---|
| அறிவிப்பவர்கள் | : | அபூஹுரைரா (ரலி) |
| | : | இப்னு அம்ரிப்னுல் ஆஸ் (ரலி) |
| ஆதாரம் | : | அபூதாவூத், திர்மிதீ |

---

* - எல்லோருமில்லை; இதில் விதிவிலக்கானவர்களுமுண்டு; அவர்கள் பாராட்டிற்குரிய மேன்மக்கள்! வாழ்க அவர்கள்!! வளர்க அவர்களது தனித்துவம்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீண்விரயம் வேண்டாம் (06)

இன்று, இவ்வுலகிலே -

உண்ணுவதிலும், பருகுவதிலும் ஆகின்ற விரயத்தை மிச்சப்படுத்தினால், வயிற்றுப்பசி தீர வழியில்லையே என்று வாய்பிழந்து, வகை தெரியாது வக்கற்று, வாடி நிற்கின்ற, வர்க்கத்தினர் எவரும் இருக்க முடியுமோ?

*இந்த விரயத்தினை -*
*விருப்பமுடன் செய்வதில், மகிழ்ச்சி காண்போர்;*
*அதில் பெருமை இருப்பதாகப் பெருமிதமடைவோர்;*
*'முஸ்லிம்' என்ற பெயர்தாங்கியோரிலுமுண்டு -*
*அ∴தல்லாதோரிலுமுண்டு!*
*அரசியல்வாதிகளிலுமுண்டு - ஆண்டிகளிலுமுண்டு!*
*வணிகர்களிலுமுண்டு - பிறதொழில் புரிவோரிலுமுண்டு!*
*வயோதிகரிலுமுண்டு - வாலிபர்களிலுமுண்டு!*
*படித்தோரிலுமுண்டு - பாமரர்களிலுமுண்டு!*
*'கலியாணம்' என்ன 'கத்னா' வென்ன?*
*அத்தனையிலும் அள்ளி இறைக்கின்றனர்!*
*'மாநாடு' களென்ன; 'இஜ்திமா'க்களென்ன?*
*எல்லாவற்றிலும் விரயம் ! வீண் விளம்பரம் !! தகாத ஆரவாரம் !!!*
*மதத்தின் பெயரால் -*
*அரசியலின் பெயரால் -*
*ஔலியாக்களின் பெயரால் -*
*அமைச்சர்களின் பெயரால் -*
*சாமிகளின் பெயரால் -*
*சடங்குகளின் பெயரால் -*

- செய்யப்படுகின்ற, வீண் செலவினங்களை அளவோடு மட்டுப்படுத்தி, மிகுதியை மிச்சப்படுத்தினால் - விரயத்தை நிறுத்தினால், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இல்லறமின்றி இக்காசினியில் கண்கலங்குவோர் காணப்படுவரோ?

ககனமும், புவியும் போற்றும் கருணைமிகு இறைவனின் கண்டிப்பான கட்டளை -

'......அளவுகடந்து (வீண்) செலவு செய்வோர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை,'

- அல்குர்ஆன் 6 : 141



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'........அளவுகடந்து (வீண்) செலவு செய்யாதீர்கள். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ், அளவுகடந்து (வீண்) செலவு செய்வோரை நேசிப்பதில்லை.'

- அல்குர்ஆன் 7 ; 31

'ஏனென்றால், மிதமிஞ்சிச் செலவு செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர். ஷைத்தானோ, தன் இறைவனுக்குக்கூட நன்றி செலுத்தா(துமாறு செய்)தவன்.'

- அல்குர்ஆன் 17 ; 27

என்று கூறும் இறைவன், நியாயபூர்வமான முறையில் செலவு செய்யாது கருமித்தனம் காட்டுபவர்களையும் கண்டிக்கின்றான் -

'விசுவாசிகளே! பேரமும், நட்பும், பரிந்து பேசுவதும் இல்லாத (நியாயத் தீர்ப்பின்) ஒருநாள் வருவதற்கு முன்னர், உங்களுக்கு நாம் அளித்திருப்பதிலிருந்து (நன்மையான வழியில்) செலவு செய்யுங்கள். (இதை) நிராகரிப்போர் தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொள்கின்றனர்.'

- அல்குர்ஆன் 2 ; 254

இறைவனின் தூதர் எச்சரிக்கிறார்கள் -

'உலோபித்தனத்தைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில், திட்டமாக உலோபித்தனமானது உங்களுக்கு முன்னிருந்தவர்களை நாசம் செய்து விட்டது. (எப்படியெனில்) அது அவர்களை ஒருவருக்கொருவர் கொலைகளைச் செய்யுமாறும் (அல்லாஹ்வினால்) விலக்கப்பட்டவைகளை, அநுமதிக்கப்பட்டவைகள் என்று கருதுமாறும் தூண்டியது.' - முஸ்லிம்

ஆக -

*அநாச்சாரமும் ; ஆடம்பரமும்*
*வீண்பகட்டும் ; வெளிவேசமும்*
*தானென்ற மமதையும் ; தற்பெருமையும்*
*தருமவான் என்ற தலைக்கிறுக்கும் ;*
*பொருள்மீது பேராசையும்,*
*பூவுலகில் தலைவிரித்தாடுகின்ற - இவ்வேளை*
*அநாச்சார வழியிலோ ; ஆகுமான பாதையிலோ -*
*ஆடம்பரத்தை அகற்றி ; வீண்விரயத்தை விடுத்து,*
*மார்க்க வரம்பிற்குட்பட்டு -*
*மிதமிஞ்சிச் செலவு செய்யும் மிலேச்சத்தனத்திலிருந்தும்,*
*ஈயாத கஞ்சன் என்ற உன்மத்த உணர்விலிருந்தும்,*
*விடுபட்டு - விவேகமுடன் வாழ்கிறார்களே உண்மையான முஸ்லிம்கள் ;*
*அஃது அவர்களது தனித்துவம் !*

014908



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பதில் தனித்துவம் (07)

"சீனாசென்றேனும் சீர்பெருங் கல்வியைத் தேடுங்கள்." என்றொரு பலவீனமான அறிவிப்புக் காணப்படுகிறது.

சீனாவுக்குச் சென்ற முஸ்லிம்கள், தங்கள் நேர்மைமிகு வர்த்தகத்தின் வாயிலாகவே, இஸ்லாத்தின் பெருமையை - அதன் மகத்துவத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டினர்.

இலஞ்சமும், வட்டியும், ஊழலும் - அளவை, நிறுவைகளில் மோசடியும் மலிந்துகிடந்த அக்காலையில் - 'ஒரே சுருட்டில், எல்லாவற்றையுமே மடக்கிக் கொள்ளவேண்டும்; எடுத்த உடனேயே குபேரனாகி, கோட்டை கொத்தளங்களைக் கட்டி வாசம் செய்யவேண்டும்.' என்ற கெடு நோக்கமில்லாமல் - 'அல்லாஹ் நாடியது கிடைக்கும்' என்ற அன்புருவான எண்ணத்தோடு, அவர்கள் தங்கள் வர்த்தகத்தை நடைமுறைப்படுத்திய காரணத்தினால், ஆயிரமாயிரமாகச் சீனர்களை இஸ்லாத்தில் இணைக்க முடிந்தது!

இன்று பல கோடிக்கணக்கான சீன முஸ்லிம்கள் வாழ்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே!

கடந்த சில தசாப்தங்களாக கம்யூனிசப் பிடியில் அவர்கள் சிக்குண்டிருந்போதிலும், சீனாவில் - சென்சீனப் புரட்சி நடந்தேறிய போதிலும், அங்குள்ள முஸ்லிம்களின் ஈமானை அசைத்திட முடியவில்லை! அது அவர்களது தனித்துவம்!!

*வட்டியை நீக்கி -*
*ஊழலைக் கைவிட்டு -*
*இலஞ்சத்தை நினைத்துங் கூடப்பாராது -*
*அளவை நிறுவைகளில் நேர்மையைக் கடைப்பிடித்து,*

- நமது வணிகர்களும், வாணிபவித்தகர்களும், பதவிகளில் அமர்ந்திருப்போரும், இதுகாலவரை தனித்துவம் பேணி வாழ்ந்திருந்தால், இன்று இந்த நாடே இஸ்லாம் மயமாகி இருக்குமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒரு வொக்துத் தொழுகைகூட -*
*நிம்மதியாகத் தொழ நேரமின்றி,*
*ஓர் இரவுகூட -*
*நிம்மதியாகத் துயில்கொள்ள நேரமின்றி,*
*கட்டிய மனையாளோடு -*
*கதைத்திருக்கக்கூட காலமின்றி,*
*பணம்! பணம்!! உழைக்கும் வழி! உயரும் வழி!!*
*- என்று இரவு பகல் பாராது......*
*ஹவால் பிடித்தலையும் பதர்களே*
*உழைப்பதிலும் தனித்துவமுண்டு -*
*இதனை உணருங்கள்!*

இறைதூதர் சொன்னார்கள் -

'.......அவன் நெடிய பயணம் மேற்கொண்டு புழுதி படிந்து, அழுக்கடைந்த நிலையில் புண்ணியத்தலத்திற்கு வருகின்றான். தனது இரு கரங்களையும் வானத்தை நோக்கி உயர்த்தி, 'என் இறைவனே!' (என்று இறைஞ்சுகிறான்) ஆயினும் அவன் உண்ணும் உணவு, பருகும் நீர், உடுத்தியிருக்கும் ஆடை அனைத்துமே ஹராமானவை - தடுக்கப்பட்ட வழியில் வந்தவை. அவன் முழுமையான ஹராமிலேயே வளர்ந்துள்ளான். அவ்வாறெனில் இத்தகையோனின் 'துஆ' எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படும்? - முஸ்லிம்

'ஒருவன் விலக்கப்பட்ட வழியில் செல்வத்தை ஈட்டி, அதிலிருந்து இறைவழியில் செலவு செய்தால் அந்தத் தர்மம் அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும் அதிலிருந்து செலவிட்டால் பாக்கியம் அற்றதாகவே இருக்கும். அதனை விட்டுவிட்டு அவன் இறந்துவிட்டால், அவனது நரகப் பயணத்திற்குச் சாதகமாகத்தான் அது விளங்கும். அல்லாஹ் தீமையைத் தீமையின் வாயிலாக அழிப்பதில்லை. மாறாக, தீயசெயலை நற்செயலின் வாயிலாக அழிக்கின்றான். ஓர் அசுத்தம் இன்னோர் அசுத்தத்தை அழிப்பதில்லை.' - மிஷ்காத்

*ஆக, உழைப்பதிலும் ஒரு வழியுண்டு !*
*அதனைச் செலவு செய்வதிலும் மார்க்கமுண்டு !*
*ஹராத்தை நீக்கி, ஹலாலைப் பேணி -*
*பொருள் தேடுவர் உண்மை முஸ்லிம்கள் ;*
*இ:.து அவர்களது தனித்துவம் !*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டுப்பற்று (08)

"நாட்டுப்பற்று ஈமானில் பாதி" என்று - பொதுவாக பெரிய மனிதர்களெல்லாம் - அடிக்கடி மேடைகளில் முழங்குவதுண்டு!

ஒரு மனிதனுடைய ஈமானில் பாதி நாட்டுப்பற்று போனால், மற்றப் பாதியில்தானா, வாழ்வின் எல்லா அம்சங்களிலுமுள்ள ஈமான் தங்கியுள்ளது?

என்ன அபத்தம்! இ்.து நம்பத்தகுந்த பலவீனமான சொல்!

ஆளுவோரைத் தாஜாப்பண்ணித் தங்களுடைய சுய காரியங்களைச் சாதித்துக்கொள்ள இப்படியான "ழயீப் - Layeef" என்று காணப்படுகின்ற அறிவிப்புக்களைத் தூக்கிப்பிடித்து, "ரசூலுல்லாஹ்வின் சொல்" எனக் காண்பித்து நிற்போரைப்பற்றி நாமறிவோம்!

ஆனால் -

ஆதாரமற்ற ஒன்றைச் சொல்லி, நாட்டுப்பற்று என்ற விடயத்தில் இவர்கள் காட்டும் வேகத்தைவிட, அதிவேகமாக அல்குர்ஆனும், ஆதாரபூர்வமான ஹதீஸ்களும் எடுத்து இயம்புகின்றன.

*நாட்டுப்பற்றுள்ளவன் -*
*கையிடை வாங்குவானா ?*
*பொதுப் பணத்தை விரயமாக்குவானா ?*
*அலுவலக நேரத்தை வீணடிப்பானா ?*
*பாடசாலையில் -*
*படித்துக்கொடுக்கும் நேரத்தைப் பாழடிப்பானா ?*
*கட்சி ரீதியில் கச்சைகட்டி நின்று -*
*நாட்டு நலனை நாசமாக்குவானா ?*
*பொது வாகனத்தை -*
*எரிபொருள்களைத் தன் சொந்தத் தேவைக்கு உபயோகிப்பானா ?*
*தேவைக்கு அதிகமாகப் பொது வாகனங்களை வைத்திருப்பானா ?*
*அபிவிருத்தி வேலைகளைச் செய்வதில் எதேஷ்டம் பெறுவானா ?*
*இனப் பாகுபாடு காட்டுவானா ?*
*மொழி வேறுபாடு உண்டுபண்ணுவானா ?*
*மதமாச்சரியங்களை வளர்ப்பானா ?*
*தேவையற்ற வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொண்டு -*
*அந்நியச் செலாவணிகளைக் கரைப்பானா ?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நாட்டுமக்கள் வறுமையால் வாடும்பொழுது*
*அந்த மக்களின் வரிப்பணத்தில் -*
*நட்சத்திர ஹொட்டல்களில் தங்கியிருந்து -*
*கவலையற்றுக் காலங்கழிப்பரோ ?*
*அரிசி ஒருபுறமிருக்கட்டும் -*
*பாணும், பருப்பும் - இவையிரண்டும்,*
*விண்ணைத் தொடுமளவிற்கு,*
*விலையேறிவிட்ட இந்நாளில்,*
*விதவிதமான -*
*மேல்நாட்டு உணவுகளை உட்கொண்டு*
*உயர்தரக் குடிபானங்களை அருந்தி மகிழ்வானா ?*
*(ஏழைமக்களின் - குடிமக்களின் பொதுப்பணத்தில்)*

ஆம்! நாட்டுப்பற்றுள்ள எந்த மனிதனும் அவைகளைச் செய்யமாட்டான்; அவ்வாறு நடந்துகொள்ள அவனுடைய உள்ளம் இடம்தராது!

இன்று, ஆதாரமற்ற அந்த ஹதீஸைச் சொல்லி அதிகார ஆதாயம் தேடுவோர், நாட்டைக் குட்டிச்சுவராக்கும், அந்த ஈனச் செயல்களையெல்லாம் செய்துகொண்டு, அல்லாஹ்வின் தூதரையும் அவற்றுக்கு ஆதாரமாக அழைப்பது வெட்கக்கேடானது; வேடிக்கை மிகுந்தது!

இப்படிப்பட்டவர்கள், "நாட்டுப்பற்று" என்றால் என்னவென்று எண்ணிக் கொண்டிருக்கின்றனரோ தெரியவில்லை!

நீங்கள் வாயால் மொழிவதுபோல் நாட்டுப்பற்று என்பது ஈமானில் பாதியல்ல; மாறாக, ஈமான் கொண்டுள்ள மனிதர்களின் நடத்தையில் - செயலில் பரிணமிக்கவேண்டிய ஒன்று; அதில் இழையோடியுள்ள ஒரு விடயம்!

அதாவது; தேநீரில் சீனியைக் கலந்தால், பின்னர் பிரித்தெடுக்க முடியாதவாறு அது சங்கமமாகி - சுவைததும்பும் பானமாகிவிடுவதுபோல, ஒரு முஸ்லிமுடைய வாழ்வில் நாட்டுப்பற்று இடம்பெற்றுள்ளது; இஃது அவர்களுடைய தனித்துவம்!

*அல்குர்ஆனின் விளக்கங்களும்*
*அண்ணலார் (ஸல்) அவர்களின் போதனைகளும்*
*நேர்வழி நடந்த கலீஃபாக்களின் ஆட்சி - நிருவாக முறைகளும்*
*நெறிதவறாத சஹாபாக்களின் வாழ்வும்*
*அதற்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக -

முஸ்லிமான்களின் தனித்துவம் என்பது, ஈமானை அடித்தளமாகக் கொண்டு "இபாதத்"தைச் செயல்முறையாக - நடைமுறைப்படுத்துவதன் மூலம் உருவாகக்கூடியது!

*அரசியலிலே -*
*பொருளாதாரத்திலே -*
*கல்வியிலே -*
*கலாசாரத்திலே -*
*பிரச்சாரத்திலே -*
*தேசியத்திலே -*
*பிராந்தியத்திலே -*
*ஊரிலே -*
*உரிமைகளிலே -*
*உத்தியோகங்களிலே -*
*வியாபாரத்திலே -*
*விவசாயத்திலே -*
*மீன்பிடித்தலிலே -*
*தலைவர்களைத் தெரிவுசெய்வதிலே -*
*சங்கங்கள், இயக்கங்கள் (ஜமாஅத்) அமைப்பதிலே -*
*பதவிகள் பெறுவதிலே -*
*அளவை, நிறுவைகளிலே -*
*கொடுக்கல் வாங்கல்களிலே -*
*வாக்குறுதி வழங்குவதிலே -*
*திருமணங்கள் நடத்துவதிலே -*
*'கத்னா'க்கள் செய்வதிலே -*
*பாராளுமன்ற நடவடிக்கைகளிலே -*
*பொது விவகாரங்களிலே -*
*மக்களோடு பழகுவதிலே -*
*முஸ்லிம் அல்லாதாரோடு நடந்துகொள்ளும் இங்கிதத்திலே -*
*அவர்களுக்குச் சேவை செய்வதிலே -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இப்படியாகவெல்லாம், ஒரு மனிதனுடைய வாழ்வில் என்னென்ன சம்பவங்கள் குறுக்கிடுகின்றனவோ, அவை அனைத்திலும், முஸ்லிம்கள் நீதி - நியாயம் - ஒழுக்கம் - தாராளத்தன்மை - விரிந்த மனப்பான்மை - உயர்ந்த குணம் - உன்னத நடத்தைகளோடு இயங்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்; இ∴து அவர்களுடைய தனித்துவம்! *

---

* - மேற்கண்ட அந்த நல்ல அம்சங்கள் ஒரு மனிதனில் குடிகொள்ள வில்லையானால், அவன் நாட்டைக் குட்டிச் சுவராக்குகிறான்; அதன் காரணமாய் அவன் நாட்டுப் பற்றற்றவன் என்பதை அறிக!

இன்றைக்கு, உயர்ந்த இஸ்தானத்தில் இருப்போரில் அநேகர் 'நாட்டுப்பற்று' என்பது பற்றி வெறும் வாய்வீச்சு நடத்துகிறார்களே தவிர, நாட்டை வளப்படுத்துவதற்குரிய நடத்தைகளைக் கொண்டிருக்கவில்லை; ஆதலால், அவர்கள்தான் நாட்டுப்பற்றற்றவர்கள் என்பதை உணர்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதமாற்றங்கள் (09)

இலங்காபுரியை, இராவணன் என்னும் திராவிட மன்னன் ஆட்சி புரிந்ததாக, வால்மீகியும், கம்பனும் விதந்துரைத்துள்ளனர் தமது இராமாயணத்தில்! அ்.து உண்மையானால் - *

எம் இனத்தைச் சேர்ந்த திராவிட மன்னன் இராவணனின் ஆட்சியில் அன்று ஹிந்துமதம் செழிப்புற்றோங்கியது எனலாம்!

பிற்காலத்திலே, வங்காள தேசத்தைச் சேர்ந்த "லாலா" நாட்டின் இளவரசன் விஜயனுடைய இலங்கை வருகையைத் தொடர்ந்து, இங்கு பௌத்தம் வேரூன்றலாயிற்று!

இஸ்லாம் தோன்றிய பின்னர், முஸ்லிம் வர்த்தகர்கள் இந்நாட்டிற்கு வந்தார்கள்.

*அவர்களுடைய -*
*நேர்மைமிக்க வணிக நடவடிக்கைகளினாலும்*
*இந்நாட்டு நலனில் காட்டிய அக்கறைகளினாலும்*
*உயர் பண்புகளினாலும்*
*சிறந்த ஒழுக்கத்தினாலும்*
*உன்னதமான நடத்தைகளினாலும்*

- கவரப்பட்ட இந்நாட்டுப் பெண்கள், அவர்களைத் திருமணம் செய்து, மங்களகரமான வாழ்வு நடத்தலாயினர்!

இந்நாட்டு மன்னர்களும், அந்த முஸ்லிம் வாணிப மேதைகளை மதித்ததோடு, அவர்கள்மூலம், விரிந்த உலகிலே பரந்து - வியாபித்திருந்த முஸ்லிம் பேரரசுகளோடு தங்களுக்கு ஏற்படக்கூடிய உறவையும், தொடர்பையும் எண்ணிப் பெருமிதமடைந்தனர்!

இந்நாட்டுப் பெண்களை அவர்கள் மணமுடிப்பதன்மூலம், உலகெங்கும் வளர்பிறையென வளர்ந்துவரும் இஸ்லாம், தங்கள் நாட்டினுக்குரிய மதங்களில் ஒன்றாக நிலைபெறுவதை எண்ணியும் அகமகிழ்வெய்தினர்.

---

* - வால்மீகியும், கம்பனும் இராமாயணத்தில் கூறுவது முற்றிலும் கற்பனையானது - மிகைப்படுத்தல் நிறைந்து - திராவிட மக்களுக்கு எதிராகவும், பிராமணீயத்திற்கு வாசாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளது எனக்கூறி அதனை அநேகர் எதிர்க்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக -

அன்று, இந்நாட்டின் சுதேச மதங்களாக ஹிந்து, பௌத்த, இஸ்லாமிய சமயங்கள் செழிப்புற்று வளரலாயின! *

எனவே -

அம் மூன்று மதங்களும் இந்த, இலங்காபுரி மக்களால் விரும்பி ** ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களாக மிளிர்ந்தன எனலாம்!

பின்னரோ -

போர்த்துக்கேய முரடர்கள் இந்நாட்டை ஆக்கிரமித்தபோது, அம்மூன்று சுதேச மதங்களுக்கும் பாதிப்புகள் உண்டாயின!

அடுத்து -

ஒல்லாந்தர் - இந்த அடாவடிப் பேர்வழிகள் வந்தபோதும், பூர்வீக மக்களின் சமயங்களுக்கு அச்சுறுத்தல்களே ஏற்பட்டன!

அந்தப் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் தங்கள் மதத்தை சுதேச மக்களிடம் திணிக்க அதட்டல் - மிரட்டல் - உருட்டல்களைக் கட்டவிழ்த்துவிட்டனர்!

தொடர்ந்து -

ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் வந்தார்கள். இவர்களும் அடாவடித்தன - மதத்திணிப்பாளர்களாகவே இருந்தபோதிலும், கொஞ்சம் நாகரிகமாக மதமாற்றங்களைச் செய்தனர்!

அந்தப் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும், எமது இலங்கைத் திருநாட்டில் இடம்பிடிக்க முயன்றபோதெல்லாம், இந்நாட்டுப் பூர்வீகப் பெண்களின் புதல்வர்களாகிய முஸ்லிம்கள் காட்டிய எதிர்ப்பும், செய்த தியாகங்களும் வரலாற்றுப்புகழ் வாய்ந்தவை; சரித்திர ஏடுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டவை!

---

* - இஸ்லாமிய ஆடவர் சிலர் வெளிநாட்டிலிருந்து வந்தனரே தவிர, மற்றப்படி இந்நாட்டின் பூர்வீகமான பெண்களை அவர்கள் மணந்துதான் வாழ்வு நடத்தினர். அதன் வாயிலாகப் பல்கிப் பெருகிய மக்களோடு, ஆண்களும், பெண்களுமாக, அநேக சுதேசிகள் இஸ்லாத்தை மனமுவந்து ஏற்றுள்ளனர்; ஆதலால், இந்நாட்டுப் பூர்வீக மக்களின் மதங்களில் ஒன்று இஸ்லாம்!

** - எந்தவிதமான பலாத்காரமோ, நிர்ப்பந்தமோ இல்லாமல்
- ஆயுதத்தைக் காட்டியோ, அடக்குமுறையைப் பிரயோகித்தோ திணிக்காமல், மக்களாலேயே மனமுவந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆங்கிலேயன் -*
*ஆசை வார்த்தைகளைக் கூறி*
*அதிகமான பணத்தை அள்ளி இறைத்து*
*உத்தியோகங்களை வழங்கி*
*பதவிகள் கொடுத்து - பவுசான வாழ்வைக்காட்டி*
*அலங்கிர்தமான ஆசை வார்த்தைகள் ஊட்டி*
*மதமாற்றம் செய்தான்*

- அப்போதெல்லாம், இந்நாட்டு - இதர மதங்களைச் சேர்ந்தோரிற் சிலர், அந்தத் துரைமார்களின் முன்னால் பல்லிழித்துப் பாதம் பணிந்து - அவன் தந்த சலுகைகளை ஏற்று - அதில் மயங்கி மதமாற்றம் பெற்றனர்!

இந்த நாட்டு மக்களால் மனமொப்பி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹிந்து, பௌத்தம், இஸ்லாம் மதங்களைச் சார்ந்தோரில், இஸ்லாம் தவிர்ந்த ஏனைய இரு மதத்தினர்களிலும் - ஆங்காங்கு சிலர் அந்நியனின் பயங்கரமான ஆயுதங்களைக் கண்டு நடுங்கியும், பளபளக்கும் பவுண் **(Gold Coin Of England)** களுக்காகப் பணிந்தும், பதவிக்காக வாய்பிழிந்து - வழியிழந்து அவனுடைய மதத்தில் சேர்ந்தனர்!

*ஆனால் -*
*அந்தப் போர்த்துக்கேயனது போர்வெறியைக் கண்டோ,*
*ஒல்லாந்தனது உறுமலைக் கேட்டோ,*
*ஆங்கிலேயனது நவீன ஆயுதங்களைப் பார்த்தோ,*
*அல்லது, அந்த ஆங்கிலேயன் தரவிருந்த -*
*உயர்படிப்பு,*
*இலண்டன் மாநகரத்து, 'இஸ்காலர்ஷிப் -* **Scholarship'**
*இங்கிலாந்து தேசத்தில் உல்லாசப் பயணம்,*
*அந்நாட்டு 'லேடி -* **Lady'** *களோடு கூடிக்குலாவி -*
*குதித்துக் கும்மாளமடிக்கும் பொழுதுபோக்கு,*
*இலங்கைத் திருநாட்டினுடைய நிருவாகத்தில் பெரும்பதவி,*
*பெருந்திரவியம் ; பெரும்புகழ் - செல்வாக்கு,*

- முதலியனவற்றுக்கெல்லாம் மயங்கி - ஈமானைப் பறிகொடுத்து - ஒரு நபரேனும் மாற்றுமதம் தழுவிடாத ஒரு சமுதாயம் - இந்த நாட்டு பூர்வீக சமுதாயங்களில் உண்டென்றால், அதுதான் முஸ்லிம் சமுதாயம்; இஃது அவர்களுடைய தனித்துவம்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY KALMUNAI

# வாழ்வே வணக்கம் (10)

எல்லா மனிதர்களது வாழ்வு முழுவதும் வணக்கமாகவே இருக்கவேண்டுமென இறைவன் விரும்புகிறான்.

அந்த நோக்கத்தோடுதான் மனிதனையும், ஜின்னையும் உற்பத்தி செய்திருப்பதாக உயர்மறை கூறுகிறது.

'(எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும், மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை. அவர்களிடத்தில் நான் யாதொரு பொருளையும் விரும்பவில்லை. அன்றி (எனக்கு) ஆகாரம் கொடுத்துக் கொண்டிருக்குமாறும் விரும்பவில்லை.'

- அல்குர்ஆன் 51 ; 56, 57

*'படைத்தான் படைப்பெல்லாம் - மனுவுக்காக,*
*மனுவைப் படைத்தான் தன்னை வணங்கச் சொல்லி !'*
*என்று பாவழியிலும் நம்மவர் பாடி மகிழ்வதுண்டு !*
*இறைவனுக்கு உருவம் சமைத்து,*
*நெய்வேத்தியம் செய்யவோ -*
*அபிஷேகம் செய்யவோ -*
*அலங்கார ஊர்தியில் வைத்து நகர் சுற்றவோ -*
*பல்லக்கில் வைத்துப் பவனி வரவோ -*
*ஆனந்தக் கூத்தாடி சாஷ்டாங்கம் பண்ணவோ -*
*ஒரு குறிப்பிட்ட வேளையில்*
*ஒரு குறிப்பிட்ட விடயத்தில்,*
*அவனுக்கு வழிபாடு நடத்தவோ -*
*மற்றெல்லா நேரங்களிலும் ;*
*மற்றெல்லா விஷயங்களிலும் ;*
*அவனுக்கு - அவனுடைய கட்டளைக்கு,*
*மாறுபட்டு வாழவோ -*
*மனிதன் படைக்கப்படவில்லை !*
*மாறாக -*
*மனிதன் தன் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் -*
*அஃது ஆத்மீகமாயினும் ;*
*இவ்வுலக விவகாரங்களாயினும் -*
*எல்லாவற்றிலும், இறைவனுக்கு -*
*இபாதத்துச் செய்(அடிபணி)யவே,*
*அவன் படைக்கப்பட்டுள்ளான் !*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத்தான் மேற்கண்ட அந்த இறைவசனம் எடுத்தியம்பி நிற்கின்றது.

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் - கிரியாம்சைகளில் அடங்கியுள்ள வணக்க முறைகளில் தலையாய - முதன்மை இஸ்தானம் பெறுவது ஐங்காலத் தொழுகையாகும்.

இந்தத் தொழுகைபற்றி இறைவன் தன் திருமறையில் -

'......ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை, மானக்கேடான காரியங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்குகிறது.'

- அல்குர்ஆன் 29 ; 45

என்று சொல்லப்படுகிறதென்றால், அந்த வணக்கம் (ஐங்காலத் தொழுகை) ஆனது, எத்தகைய உன்னதமான மக்களை உருவாக்குகிறது என்பதை எண்ணிப்பாருங்கள்

*ஓர் உண்மைத் தொழுகையாளி -*
*களவெடுக்க மாட்டான் !*
*பொய் பேசமாட்டான் !*
*பிற மனிதர்களை ஏய்க்கமாட்டான் !*
*மற்றவனுடையதைச் சுரண்டமாட்டான் !*
*சமூகத்தை ஏமாற்றும் ஈனச் செயல்களில் இறங்கமாட்டான் !*
*வட்டி வாங்கமாட்டான் !*
*இலஞ்சம் பெறமாட்டான் !*
*தொழிலாளியின் கூலியைத் தரமறுக்கமாட்டான் !*
*மதுபானம் அருந்தமாட்டான் !*
*பொதுச் சொத்தை விழுங்கமாட்டான் !*
*அரசாங்கச் சொத்தை அபகரிக்கமாட்டான் !*
*அளவை நிறுவைகளில் மோசடி செய்யமாட்டான் !*
*அநியாய விலை கோரமாட்டான் !*
*வட்டிக்கு நிகராக அமையக்கூடிய -*
*வெவ்வேறுவித வியாபார முறைகளை உருவாக்கி -*
*அவற்றுக்கு வினோதமான - நாகரிகமான பெயர்கள் சூட்டி*
*'லேவா தேவி'* நடத்தமாட்டான் !*
*எப்பொழுது பார்த்தாலும் - எங்கு பார்த்தாலும்,*
*பணம் ! பணம் !! என அலைந்துதிரிய மாட்டான் !!!*

* லேவா தேவி - வடிகட்டின வட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் தந்ததைக் கொண்டு-
திருப்தியடையாதிருக்கமாட்டான் !
போதிய அறிவில்லாமல் அறிஞர் (ஆலிம்)
வேடம்பூண முன்வரமாட்டான் !
தரமான ஞானமில்லாமல் -
கற்றதைச் செயல்படுத்தாமல் -
பிறருக்கு உபதேசம் (ப.்.மு - பயான்) புரிய முன்வரமாட்டான் !
வெளிவேஷம் போடுவதை விரும்பமாட்டான் !
தீயாரோடிணைந்திருக்க மாட்டான் !
திரண்ட செல்வத்தின் அதிபதியானாலும் -
நாடாளும் நாயகர்கள் ஆனாலும் -
அவர்கள் முன்னே, தலைகுனிய மாட்டான் !
அல்லாஹ்வின் திருப்தி ஒன்றையே -
பெரிதெனக் கருதுவதை மறுக்கமாட்டான் !

- இவ்வாறு உண்மையான - முறையான தொழுகையாளிகள் நடந்துகொள்கிறார்கள்; உண்மை முஸ்லிம்களின் வாழ்வு இப்படித்தான் அமைகிறது; இ.்.து அவர்களது தனித்துவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருளும், பொருளும் (11)

'அருள் இல்லாதாருக்கு அவ்வுலகமில்லை; பொருள் இல்லாதோருக்கு இவ்வுலகமில்லை!'

என்று யாரோ சொல்லிவைத்தார்கள்.

இக்கூற்றினை உதாரணத்துக்கு எடுத்துரைப்பாருமுண்டு! இதனை என்ன உட்கருத்தினைக்கொண்டு, அவர்கள் உரைத்தனரோ தெரியவில்லை!

ஆனால், நான் சொல்கிறேன் -

அருள் இல்லாதாருக்கு அவ்வுலகமும் இல்லை; இவ்வுலகமும் இல்லை!

பொருள் இல்லாதோருக்கு இறையருள் இருந்தால், இவ்வுலகமும் இன்பமாய் அமையலாம்; அவ்வுலகமும் சிறப்பாய் அமையலாம்!

ஈதென்ன புதுமை?

ஆன்றோர்கள் சொல்லிவைத்தார்கள் -

'அருள் பெற்றால் மட்டுமே, அவ்வுலக வாழ்வு வளம் பெறும்; இவ்வுலகச் சிறப்பிற்குப் பொருள் வேண்டும்!' என்று.

இங்கே என்னடா என்றால் -

அவ்வுலக வாழ்வின் சிறப்போ, இவ்வுலக வாழ்வின் வனப்போ எதற்கும் பொருள் முக்கியமல்லவென்று - இரண்டிற்கும் ஒருசேரக் கூறப்படுகிறதே!

என நீங்கள் நினைந்து மூக்கின்மேல் விரல்வைத்து வியந்து நிற்கிறீர்களா?

ஆம்!

பொருள் இல்லாதாருக்கு இவ்வுலகமில்லை - அதாவது, பொருள் இருந்தால்தான் இவ்வுலகம் வளமுள்ளதாய் அமையும் என்ற கருத்து எந்தவகையில் பொருத்தமானது?

*பணம் படைத்தவர்களென்ன நீடூழி வாழ்ந்துவிட்டார்களா ?*
*மாடாய் உழைத்து - மாற்றானை வதைத்து -*
*மாளிகை கட்டிய போதிலும்,*
*அதிலென்ன நிம்மதி கண்டார்களா ?*
*வட்டி வாங்கி, இலஞ்சம் பெற்று -*
*இகலோக சாதனங்களைத் தேடியபோதிலும்,*
*அதிலென்ன அவர்கள் நிம்மதியடைந்துவிட்டார்களா ?*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அதேவேளை -*
*நேர்மையாக உழைத்து; நீதி, நியாயங்களுக்குக் கட்டுப்பட்டு,*
*நிதிவளம் பெற்றவர்கள்கூட - அதனால்,*
*நிறைவான நிம்மதியை நெருங்கி விட்டார்களா ?*
*அவையெதுவுமேயில்லாது -*
*பொருள்வளம் கிடைக்கப்பெறாது -*
*ஏழையாய்க் கஷ்டப்படுவோர் - என்ன,*
*இவ்வுலகைவிட்டு ஓடிவிட்டார்களா ?*

- இல்லை! இல்லை!! எல்லோருமே இறைவனால் விதிக்கப்பட்ட - அவர்களது இறுதிக்காலம்வரை, இவ்வுலகிலேயே கிடந்துழல்கிறார்கள்!!!

இறைபக்தியின் காரணமாக அருள் பெற்றோர் மட்டுமே இவ்வுலகை ஆனந்தப் பெருவெளியாக்கி, மறுவுலக சாதனங்களைத் தேடிக்கொள்கின்ற தலமாகக் கருதி - நிம்மதி பெற்ற, நிறையின்பப் பெருவாழ்வு வாழ்கின்றனர்!

பொருள் படைத்தோரும் சரி, பொருள் இல்லாதோரும் சரி - யாராகவிருந்தாலும், தங்களுடைய இறைவிசுவாசம், அதனோடு கூடிய பரிசுத்தமான வாழ்வு என்பன மூலம் பெறக்கூடிய இறையருள் காரணமாக, இவ்வுலகை இன்பலோகமாகவும் பெறுகிறார்கள்!

அருள் இல்லாதார், பொருள் விடயத்தில் தன்னிறைவுகண்டு - அதற்கு மேலாலும் வழிந்தோடியபோதிலும், அல்லது வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் வறியோராய் இருந்தாலும் இவ்வுலகு அவர்களுக்கு அமைதி தராது - நிம்மதி கொடுக்காது - நிறைவுடைய வாழ்வைத் தராது!

ஆக -
இறையருளைத்தான் மனிதன் முதலில் தேடிட வேண்டும்; மற்றவையெல்லாம் அதற்குப் பின்னால்தான்!

இப்படியான இரகசியங்களை உணர்ந்து, உண்மை முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்; இ..து அவர்களுடைய தனித்துவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கொள்கை இல்லாதவன், கோமாளி ;*
*இலட்சியமில்லாதவன், இழிந்த செயலினன் !*
*ஆம் -*
*கொள்கை - அது நல்லதோ, கெட்டதோ ;*
*எதுவாயிருந்தாலும், ஒன்றில் பிடிப்பு வேண்டும் !*
*அதுபோல -*
*அவன் கொண்டுள்ள கொள்கையில்,*
*இலட்சிய நோக்கு அவசியம் !*
*நேர்மையான கொள்கைப் பிடிப்பும் சிறந்தது ;*
*நீதமான இலட்சியத் துடிப்பும் உயர்ந்தது !*
*மோசமான கொள்கைப் பிடிப்புத் தாழ்ந்தது ;*
*தவறான இலட்சியத் துடிப்பும் தரமிழந்தது !*
*இருந்தும் -*
*உண்மையான - உயர்ந்த கொள்கைக்குச் சார்புடையோனாயினும்,*
*அதில் அவனுக்குப் பிடிப்பு இல்லையென்றால்,*
*இலட்சியத் துடிப்பும் காணப்படாவிட்டால் -*
*அந்த ஆசாமியும் நம்பத்தகுந்த பேர்வழியல்ல !*
*அதேவேளை -*
*மோசமான கொள்கையுடையோனாயினும்,*
*அதில் அவனுக்குப் பிடிப்பு இருந்தால் -*
*இலட்சியத் துடிப்புக் காணப்பட்டால் -*
*அவனுடைய கொள்கை விஷயத்தில் இல்லாவிட்டாலும் -*
*வேறு விடயங்களில் நம்ப இடமுண்டு ;*
*ஏனெனில், அவன் ஒரு கொள்கைவாதி !*
*'அண்ணலெம் பெருமானாரைப் போலிரு*
*அல்லது அபூஜஹ்லைப் போலிரு - ஆனால்,*
*அப்துல்லாஹிப்னு உபையைப் போலிராதே !'*

- என்று, சாதாரணமாக, நமது மக்கள் கூறக் கேள்விப்பட்டிருப்பீர்கள்!

ஆக -

அண்ணலெம் பெருமானார் வழி - இறைவழி - இயற்கை வழி - எதார்த்தவழி என்பது எல்லோருக்கும் வெளிச்சம்!

அபூஜஹ்ல் வழி இறைவிரோத வழி - இயற்கைக்கு மாறுபட்ட வழி - எதார்த்தத்துக்குப் புறம்பான வழி! என்பது யாவருக்கும் புரியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அப்துல்லாஹிப்னு உபை போன்ற சந்தர்ப்பவாதிகளின் வழி எது? அது நீண்டகாலம் மக்களுக்குப் புரியாத ஒன்றாகவே இருந்து வந்தது!

இறுதியில் - இறைவன் அறிவித்த பின்னர்தான், அந்நயவஞ்சகர்களின் கூற்றுப் புரியலாயிற்று;

'(நபியே!) 'உமக்கு நாம் முற்றிலும் வழிப்பட்டோம்!' என அவர்கள் (தங்கள் வாயால்) கூறுகின்றனர். எனினும் அவர்கள் உமது சமூகத்திலிருந்து சென்றுவிட்டாலோ, அவர்களில் ஒரு கூட்டத்தினர், (நபியே!) நீர் கூறியதற்கு மாறாக, இரவெல்லாம் (சதி) ஆலோசனை செய்துகொண்டேயிருக்கின்றனர்........' - அல்குர்ஆன் 4 : 81

இத்தகைய நயவஞ்சக நரிகளால்தான் இன்றைய உலகு பாழ்பட்டுக் கிடக்கிறது; அமைதியிழந்து அல்லோல கல்லோலப்படுகிறது!

அதனையும் அல்லாஹ் வெளிப்படுத்துகிறான் -
'அவர்களை நோக்கி, 'நீங்கள் பூமியில் விஷமம் செய்துகொண்டு அலையாதீர்கள்' என்று கூறப்பெற்றால், (அதற்கு) அவர்கள், 'நாங்கள் சமாதானத்தை உண்டாக்குவோர்தாம்! (விஷமிகளல்ல)' எனக் கூறுகின்றார்கள்.' * - அல்குர்ஆன் 2 : 11

தனிநபர்கள் மாத்திரமல்ல; குழுக்கள் ரீதியாகவும், நாடுகளிடையேயும், சமுதாயங்களிடையேயும் இந்த நயவஞ்சக நோய் தாண்டவமாடுகின்றது!

*இன்றைக்கு -*
*நடுநிலை நாடுகள்,*
*அணிசேரா நாடுகள்,*
*என்றெல்லாம் செப்புகிறார்கள் !*
*ஆனால் -*
*எந்த நாடாவது,*
*எந்தத் தேசமாவது,*
*அணிசேராதிருக்கின்றனவா ?*
*எந்தத் தலைவனாவது,*
*எந்த அதிபதியாவது,*
*நடுநிலை நிற்கின்றார்களா ;*
*அணிசேராதிருக்கின்றனரா ?*

---

* - எச்சரிக்கை! நிச்சயமாக இவர்கள்தாம் குழப்பவாதிகள்; சமாதானத்தின் எதிரிகள்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நடுநிலை என்பதும்,*

*அணிசேரா நிலை என்பதும் - இன்றைய நிலையில்*

*ஒரு கேலிக்கிடமான பதங்களாகும் !*

*இனரீதியாக -*

*மதரீதியாக -*

*மொழிவாரியாக -*

*அரசியல் ரீதியாக -*

*பொருளாதார ரீதியாக -*

*- இப்படியாகவெல்லாம்,*

*பிரச்சினைகள் உருவெடுத்து,*

*நாடுகளும் ; தேசங்களும்,*

*நரகை விடவும்,*

*நாற்றமெடுத்துள்ளனவென்றால்,*

*அவற்றிற்கு முற்றிலுமான காரணம் ;*

*நயவஞ்சகமாக நடுநிலை காண்பதுதான் !*

*முனா஁பிக்தனமாக அணிசேரா நிலை எய்துவதுதான் !!*

*ஆகவேதாம் நாம் கூறுகிறோம் -*

*நடுநிலை வேண்டாம் ; ஒருநிலை வேண்டும் !*

*அணிசேரா நிலை வேண்டாம் ; ஓரணி வேண்டும் !!*

*அது இறையணியாக இருக்கவேண்டும் ;*

*ஷைத்தானிய அணியாக இருத்தல் கூடாது !!!*

உதாரணத்திற்கு ஒருசில -

இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு என்று பிரகடனப்படுத்தப்பட்டு வந்துள்ள அதேவேளை அங்கு ஹிந்து மதவெறி அரசியல் பீடத்தை ஆக்கிரமித்துள்ளதைப் பார்க்கிறோம்!

அது -

பாரதீய ஜனதாப் பாட்டியாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சியாக விருந்தாலும் சரி அல்லது ஜனதாதளம், கூட்டணி எதுவாயிருந்தாலும் அங்கெல்லாம் மதவெறி - பிராமணிய வெறி தாண்டவமாடுகின்றது; இதனை முழு உலகும் நன்கு அறியும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாத்மா காந்தி கண்ட - பிராமணீய இலட்சியமாகிய ராமராஜ்யத்தைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் அங்கு நடைபெற்று வருகின்றன. *

இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு என்றால், 600 வருடங்கள் பழமை வாய்ந்த *பாபர் மசூதி* எப்படி, ஹிந்து வர்ணாசிரம வெறியர்களால் உடைக்கப்படமுடியும்?

பாபர் மசூதியைத் தகர்த்து தரைமட்டமாக்குவதற்கு, இந்தியாவின் - அப்போதையப் பிரதம மந்திரி நரசிம்மராவ் என்ற பார்ப்பானின் அரசாங்கமும் - இராணுவம், பொலிஸ்படை அனைத்தும் உடந்தையாக இருந்துள்ளன!

பள்ளிவாசலை உடைக்கவந்த பிராமணீய ஜாதி வெறியர்களுக்கு அந்த ராணுவமும், பொலிஸ்படையும் பாதுகாப்பளித்து, அத்தகைய அநாகரிக - காட்டுமிராண்டிச் செயலைச் செய்துமுடித்துள்ளனவென்றால், பாரததேசம் ஒருமத சார்பற்ற தேசமா? அப்படி இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு என்று பகர என்ன யோக்கியதையுண்டு?

ஓர் அரசாங்கமும், அதன் ஆட்சியாளர்களும், எதிர்க்கட்சியினரும், இராணுவமும், பொலிஸ்படையும் ஒருமித்த கருத்தோடு ஒன்றிணைந்து, அந்நாட்டினுடைய சிறுபான்மை மக்களின் வணக்கஸ்தலத்தை உடைத்தெறிந்து, அதன் நிமித்தமாக எழுந்த வகுப்புக் கலவரத்தில் பெரும்பான்மை மக்களுக்குத் துணைபுரிந்து, சிறுபான்மையோரைக் கொன்றுகுவித்துவிட்டு, அதன்பின்னரும் தன்னை ஒரு மத சார்பற்ற நாடு என்று பிரகடனப்படுத்தித் தம்பட்டமடிக்கின்ற ஒரு தேசம் உண்டென்றால் - இந்த உலகத்திலேயே அது இந்தியாவாகத்தான் இருக்கமுடியும்.

---

* - இராம ராஜ்யத்தை அமைப்பதானால் அதற்கோர் அடிப்படை அரசியல் யாப்புத் தேவை; அதனை இராமருடைய எந்த வேதப் புத்தகத்திலிருந்து பெறப்போகிறார்களோ தெரியவில்லை!

கற்பனை வடிவிலான வால்மீகி இராமாயணமும், கம்பராமாயணமும், சனாதன - வர்ணாசிரம காவியங்களும் அரசியல் நடத்த முடியுமா? என்ன, கண்மூடித்தனமான போக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா ஒரு மத சார்பற்ற நாடல்ல; மாறாக, அது ஒரு மத வெறிகொண்ட நாடு என்பது நிரூபிக்கப்பட்டு வருகிறது. *

*இப்படித்தான் இவ்வுலகிலே -*
*மதசார்பற்ற நாடுகள்,*
*நடுநிலை நாடுகள்,*
*அணிசேரா நாடுகள்*

- என்று தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ள அனைத்தும்!

எனவேதான் நாம், அந்த முனா·.பிக்தனமான கூற்றுக்களையெல்லாம் நிராகரிக்கிறோம்!

மதசார்பின்மை - நடுநிலை - அணிசேரா அமைப்பு - என்பன போன்ற பசப்பு வார்த்தைகளையெல்லாம் தூக்கி வீசிவிட்டு - ஒரே அணியில் - அதாவது, இறை அணியாகிய இஸ்லாமிய அணியில் இணையுமாறு முழு உலகையுமே அழைக்கிறார்கள் உண்மை முஸ்லிம்கள்; இ·.து அவர்களுடைய பிறப்புரிமை!

அதுபோல தாம் விரும்பும் எந்த அணியிலும் சேர்ந்து இயங்க - அவ்வமைப்புக்கு ஆள்திரட்ட உலக மக்கள் அனைவரும் உரிமையுடையோராவர்!

ஆதலால், மனிதர்கள் எந்த அணியிலும் சேரலாம், எம்மதத்தையும் பின்பற்றலாம்; அதில் உறுதியாகக் காலூன்றி நிற்கலாம்!

ஆனால், எந்தச் சார்புமின்றி, எம்மதத்திலும் பிடிப்பின்றி - "நடுநிலை", "மதசார்பற்ற நிலை" என்றெல்லாம் பசப்புவது முழு உலகுக்குமே அபாயகரமானது!

---

* - *பாபர் மசூதி* உடைக்கப்பட்டதும் ஆவேசமுற்ற - பாமர முஸ்லிம்கள் கோவில்களை உடைத்து ஆர்ப்பாட்டம் செய்தனர். பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் சில நாடுகளில் இவ்விதம் நடைபெற்றது. அதனைக் கண்ணுற்ற இஸ்லாமிய நாடுகள் நிலைமையைக் கட்டுப்படுத்தி, உடைக்கப்பட்ட ஆலயங்களைப் புனர்நிர்மாணம் செய்துகொடுத்தன; ஆனால், இந்தியா உடைக்கப்பட்ட மசூதியைக் கட்டிக் கொடுத்ததா? இதுவரையில்லை! அன்று கண்டனக் குரல் எழுப்பி, நீலிக் கண்ணீர் வடித்த - இந்திய அரசியற் கட்சிகளும், உலக சக்திகளும் ஏன் இந்தியாவை வற்புறுத்தவில்லை? கட்டிக்கொடுக்குமாறும், முஸ்லிம்களின் வணக்கஸ்தலத்தை அவர்களிடமே ஒப்படைக்குமாறும், அரசாங்கத்தை வற்புறுத்தக்கூடாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில், அவர்களுடைய கொள்கை என்ன? இலட்சியமென்ன? நிறமென்ன? என்பனவற்றைப் புரிந்துகொள்ள முடியாது - அவர்களை நம்பி மக்கள் ஏமாந்து போகலாமல்லவா?

எந்த நேரம் - எந்த வேளை தங்கள் நிறத்தை அவர்கள் மாற்றிக் கொள்வார்கள் என்பது யாருக்குமே புரியாத புதிராகிவிடும்!

எனவே, நடுநிலை வேண்டாம்; ஒருநிலை வேண்டும்!

இஸ்லாமிய ஆட்சியில் மதவெறி கிடையாது; மாறாக, மார்க்கப்பற்று உண்டு! அங்கு சகல மதங்களும் சுதந்திரம் பெறுவதோடு, சர்வமத ஆலயங்களும் பாதுகாக்கப்படும்!

இவை வெற்று வார்த்தைகளல்ல; ஜாதி வெறிபிடித்த பார்ப்பான் நரசிம்மராவ் வடித்த நீலிக்கண்ணீர் அல்ல; இவ்வணியில் பல நூற்றாண்டுகள் அமுல்நடத்தப்பட்டு வெற்றிகண்ட வழி; எதிர்காலத்திலும் அமுல்நடத்தப் படவிருக்கின்ற வழி!

ஏனெனில் கி.பி. 21ம் நூற்றாண்டு, இஸ்லாமிய ஆட்சி - உலகெங்கும் நிலைநாட்டப்பெறுகின்ற வெற்றி நூற்றாண்டு!

அதனைத் தடுத்து நிறுத்த அமெரிக்காவாலும் முடியாது; ரஷ்யாவாலும் இயலாது! *

---

* - கேரள முஸ்லிம் லீக் தலைவர்களில் ஒருவரான, மர்ஹூம் அல்ஹாஜ். C.H. முஹம்மது கோயா சாஹிப் அவர்கள் 1960 களில் பம்பாயில் முழங்கினார் - 'இந்தியாவை, முஸ்லிம்களாகிய நாங்கள் சுமார் 850 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தோம்; இனிமேல் ஆளப்போவதில்லை என்பது உண்மைதான்! எனினும் இந்திய அரசியலின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் முஸ்லிம்களாகிய நாங்களாகத்தான் இருப்போம்!' என்று

*அஃது அந்தச் சூழ்நிலையில் சரிதான்!*
*ஆனால், நான் சொல்கிறேன் -*
*எதிர்காலத்தில் இந்தியா முழுவதையும் - முஸ்லிம்கள்*
*ஆளுகின்ற சந்தர்ப்பம் வரும் ;*
*முஸ்லிம் இந்தியாவாக அந்நாடு திகழும் !*
*ஏனெனில் -*

-"எனது உம்மத்தைச் சேர்ந்த இரு சைனியங்களை அல்லாஹுதஆலா நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிவிட்டான்; ஒன்று; இந்தியாவின்மீதுபோர் தொடுக்கும். மற்றொன்று மரியமின் குமாரர் ஹஸரத் ஈஸா(அலை) அவர்களுடன் இருக்கும்."

- அறிவிப்பவர் : ஃதவ்பான் (ரலி)
- ஆதாரம் : நஸயி - கிதாபுல் ஜிஹாத் முஸ்னத் அஹமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே -

ஏ, மனிதனே! நீ யாரை வேண்டுமானாலும் நம்பு; ஆனால், எதிலும் கொள்கைப் பிடிப்பற்ற - இலட்சியமற்ற - சந்தர்ப்பவாதிகளை மட்டும் நம்பிடாதே!

ஏ, மனிதனே! நீ யாரை வேண்டுமானாலும் ஏறெடுத்துப்பார்; ஆனால், மீனுக்கு வாலும், பாம்புக்குத் தலையும் காட்டும், வாலாக்களை மட்டும் ஏறெடுத்தும் பார்த்திடாதே!

ஏ, மனிதனே! நீ யாரை வேண்டுமானாலும் தொடர்ந்து செல்; ஆனால், இந்தப் பச்சோந்திகளை மட்டும் தொடர்ந்திடாதே!

ஏ, மனிதனே! நீ யாரை வேண்டுமானாலும் நேசி; ஆனால், இந்த வேடதாரிகளை மட்டும் நேசித்திடாதே!

ஏ, மனிதனே! நீ யாரை வேண்டுமானாலும் நினைத்துப்பார்; ஆனால், இந்த சமூக விரோதிகளை மட்டும் நினைத்துப்பார்த்திடாதே!

ஏ, மனிதனே! நீ யாரை வேண்டுமானாலும் உயர்த்திப் பேசு; ஆனால், இந்த - அஃறிணைகளைவிடவும் தாழ்ந்துவிட்ட ஜென்மங்களை மட்டும், உயர்திணைக்கு உயர்த்திப் பேசிடாதே!

ஏனென்றால், (இஸ்லாமியக் கண்ணோட்டத்தில்)

அண்ணலெம் பெருமானார் வழிசென்றால் அனைத்துலகப் பாக்கியங்களும் பெறுவீர்; உன்னுடைய முயற்சிகளுக்கேற்ப சுவனலோக சுகானந்தங்களும் கிடைக்கும்!

---

அபூஜஹீல் - ஃபிர்அவ்ன் - நம்ரூது - ஹாமான் - காரூன் - ஆகியோர்வழி சென்றால் ஈருலக பாக்கியங்களும் அற்றுப்போய்விடும்; என்றாலும் நரகலோகத்திலாவது ஓர் இடம் தரப்படலாம்!

ஆனால், முனாஃபிக் - நயவஞ்சகத்தின் முன்னோடி அப்துல்லாஹிப்னு உபை, மற்றும் மீர்ஜாபர் - எட்டப்பன் - காக்கைவன்னியன் முதலானோர் வழி சென்றிடாதே; நரகலோகத்திலும் நல்ல இடம் கிட்டாது; அதிலுள்ள மிகத் தாழ்ந்த - கடின வேதனைக்குரிய பாதாளமே உமக்குக் கிடைக்கும்!

இந்த உண்மைகளை ஓரணியில் - இஸ்லாமிய அணியில் உறுதியாக - பாதம் பிசகாது - தளர்வுற்றுச் சாய்ந்து - வளைந்து கொடுக்காது - தலைநிமிர்ந்து நின்று, உலகோருக்கு எடுத்துரைக்கிறார்கள் உண்மை முஸ்லிம்கள்; அஃது அவர்களுடைய தனித்துவம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ஓர் இபாதத்;
# அது சாக்கடையல்ல! (13)

இன்றெல்லாம், 'அரசியல் ஒரு சாக்கடை' என்ற கருத்து பரவலாக எல்லோரிடமும் குடிகொண்டிருப்பதைக் காண்கிறோம். அரசியல் பற்றி ஏதாவது ஒரு பிரச்சினை வரும்போது, இஸ்லாத்தின் நெறியை - அல்லாஹ்வின் கட்டளையை - அண்ணல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை எடுத்துக் காட்டினால், "அது மார்க்கம், நாம் பேசுவது அரசியல்" என்று சட்டெனப் பதில் கூறுகின்றனர்.

பாமர முஸ்லிம்களாயினும் அல்லது சன்மார்க்கம் கற்ற பண்டிதராயினும் அனைவரும் இந்த விடயத்தில் ஒத்த கருத்துடையவர்களாகவே காணப்படுகின்றனர்!

இத்தகைய ஒரு மோசமான கருத்து நம்மவரிடையே குடிகொண்டிருப்பது மட்டுமல்ல; பெரும்பாலோர் அதன்படியே செயலாற்றவும் செய்கின்றனர்!

அரசியலில் ஈடுபட்டவர்கள்தான், அநேகமாக இக்கருத்தை மேடைகளில் எடுத்து முழங்குபவர்களாகவும் இருக்கிறார்கள்; பாமரரும், அறிந்தோ அறியாமலோ அதனை ஜீரணிக்கவும் செய்கின்றனர்! அத்தோடு, அரசியலில் ஈடுபாடு கொண்ட - சன்மார்க்கப் பண்டிதர்களும் அதேகருத்தை சரிகண்டு செப்புகின்றனர்!

அரசியல் ஒரு சாக்கடை என்றால், அதனால் குடிமக்கள் எப்படிப் பிரயோசனம் பெறமுடியும்? அதன்மூலம் அவர்கள் பிரச்சினைகள் எங்ஙனம் தீரும்?

'சாக்கடை' என்பது கழிவுநீர் பாயும் நாற்றமெடுத்த ஓர் ஓடை! அதனை அண்டிப் புழங்கினால், மக்களுக்கு நோயும், வேறுபல தொல்லைகளுமே ஏற்படும்!

அப்படிப்பட்ட மோசமான ஒன்றுக்கு, ஏன் அரசியலை ஒப்பிடுகிறார்கள் என்றால், அதில் ஈடுபட்டுக்கொண்டே சகலவிதமான மோசடிகளையும்; சமூகவிரோதச் செயல்கள், நாட்டுடமையைச் சூறையாடுதல், மக்கள் உரிமைகளைப் பறித்தல், குடிமக்களைச் சுரண்டுதல், பழிவாங்குதல் முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிந்த நடவடிக்கைகளைச் செய்வதற்கு - அரசியல் இப்படிப்பட்ட மோசமான ஒன்றுதான் என்ற எண்ணத்தை மக்கள் மனங்களில் ஆழமாகப் பதியவைத்து, அதனைச் சட்டபூர்வமாக்கிவிடுதல் - அவர்களைப் பொறுத்தவரை அவசியம் என்பதனால்தான்!

அரசியல் புனிதத்துவமிக்கது என்று மக்கள் கருதுவார்களானால், அதில் ஈடுபட்டுக் குளறுபடி செய்வோரின் நிலை திண்டாட்டமாகிவிடும், ஆதலால் அதனை ஒரு சாக்கடை என்று சாங்கோபாங்கமாகப் பறைசாற்றுகின்றனர்!

இக்கருத்தை ஒரு முஸ்லிம் அங்கீகரித்தால் அவர் அல்குர்ஆனின் கட்டளைகளையும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அறிவுரைகளையும் நிராகரித்தவராகிவிடுவார்! (நஊதுபில்லாஹிமின்ஹா)

முஸ்லிமல்லாதவர்கள், அரசியலை ஒரு சாக்கடை என்று - சந்தர்ப்பத்திற்கேற்றபடி கூறினால், அஃது ஆச்சரியத்திற்குரிய ஒன்றல்ல; ஆனால், முஸ்லிம்களும் அதனை ஆமோதிப்பதுதான் எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது! அதிலும் மிகப்பெரிய வியப்பு என்னவென்றால் அல்குர்ஆனையும், ஹதீதுகளையும் ஆய்ந்தறிந்தவர்கள்கூட - நிலைமைக்கேற்ப அதனைச் சரிகாண்பதுதான்!

அரசியலைப் பொறுத்தவரை, அதில் ஈடுபட்டுள்ள முஸ்லிமல்லாதோருக்கு - மக்கள் நிருவாகத்தின் புனிதத்துவத்தை தங்கள் நடத்தை; செயற்பாடுகளின்மூலம் எடுத்துக்காட்ட வேண்டியது, அதில் ஈடுபட்டுள்ள முஸ்லிம்களின் கடமையாகும். அதற்கு முன்னுதாரணமாக இவர்கள் தம் அரசியல் ஈடுபாட்டை ஓர் இபாதத்தாகக் கருதி - இறைபயபக்தியோடு இயங்குதல் அவசியம்!

**'விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நடங்கள். (அவ்வாறே அல்லாஹ்வுடைய) தூதருக்கும், உங்கள் அதிபருக்கும் வழிப்பட்டு நடங்கள். (விசுவாசிகளே!) உங்களுக்குள் யாதொரு விஷயத்தில் பிணக்கு ஏற்பட்டால், அதனை அல்லாஹ்விடமும், (அவனுடைய) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள். மெய்யாகவே நீங்கள், அல்லாஹ்வையும் இறுதிநாளையும் விசுவாசம் கொண்டவர்களாகவிருந்தால், (அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் திருப்தியாகவே ஒப்புக்கொள்ளுங்கள்) இதுதான் நன்மையாகவும் மிக அழகான முடிவாகவும் இருக்கும்'**

**- அல்குர்ஆன் 4 ; 59**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கண்ட ஆயத்திற்கு மு.ஃபஸ்ஸிரீன்கள் விளக்கமளிக்கும்போது சொல்கிறார்கள் -

இஸ்லாத்தின் அமைப்பில் முழு சமய, நாகரிக, அரசியற் கோட்பாடுகள் யாவும் இதில் பொதிந்துள்ளன. மேலும், இஸ்லாமிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதன்மையான பிரிவும் இந்த வசனமாகும்.

இதில் பின்வரும் நான்கு அடிப்படை விதிகள் உள்ளன:

1) இஸ்லாமிய அமைப்பில் அடிபணிவதற்குரியவன் அல்லாஹ் மட்டுமேயாவான். ஒரு முஸ்லிம் அனைத்துக்கும் முதலாவதாக அல்லாஹ்வின் அடிமை; மற்றவையெல்லாம் அதற்குப் பின்னர்தான்.
2) இரண்டாவது அடிப்படை இறைதூதருக்குக் கீழ்ப்படிதலாகும்.
3) மேற்கூறப்பட்ட இரு கீழ்ப்படிதல்களுக்குப் பிறகு மூன்றாவதாக முஸ்லிம்களில் இருக்கின்ற "உலுல் அம்ர்" என்னும் அதிகாரம் உடையவர்களுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

'*உங்களில் அதிகாரமுடையவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்*' என்னும் இந்த மூன்றாவது விடயம் பற்றி ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) குறிப்பிடும்போது, 'நியாயத்தையும், நீதியையும், நேர்மையையும் அமுல்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவதை இது குறிக்கும்' என்பதாகச் சொல்கிறார்கள்.

ஆனால் -

அதிகாரிக்கு வழிப்படுவதெல்லாம் மார்க்கத்தில் அனுமதிக்கப் பட்டவற்றில்தான்

- புஹாரி, முஸ்லிம்

மார்க்க சம்பந்தமானதோ, உலக (அரசியல்) சம்பந்தமானதோ - எவை சம்பந்தப்பட்டதாயிருந்தாலும் சரி, சகலவற்றிலும் அல்லாஹ்வுக்கு அஞ்சி, அண்ணலெம் பெருமானாரின் அழகிய முன்மாதிரிகளைப் பின்பற்றி, நிருவாகத்தில் இருப்போருக்கு (நேர்மையான விஷயங்களில்) கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று, இஸ்லாம் கூறுவதன்மூலம் அரசியலை ஒரு புனிதத்துவமிக்கதாகக் கருதுகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர நட்பு ; நிரந்தரப் பகைமை

"அரசியலில் நிரந்தர நட்பும் கிடையாது, நிரந்தரப் பகைமையும் இல்லை!" என்பதும் அரசியல் வட்டாரங்களிலிருந்து கிளம்பும் ஒரு பூச்சாண்டி! இது மற்றவர்களுக்கு சரியாக இருக்கலாமோ என்னவோ, ஆனால், முஸ்லிகளுக்குச் சரிவராது. அதுமட்டுமல்ல "முனா·.பிக்" என்னும் நயவஞ்சக நிலைக்கு நம்மை இட்டுச் சென்றுவிடக்கூடிய ஒரு நச்சுக்கருத்து!

மக்களிடையே நட்பை நிரந்தரமாக வளர்த்து, பகைமையை நிரந்தரமாகக் களைந்துவிட வேண்டுமென்பதே இஸ்லாத்தினுடைய விருப்பமாகும்.

'விசுவாசிகள் (யாவரும்) நிச்சயமாகச் சகோதரர்களே! ஆகவே, உங்கள் சகோதரர்களுக்கிடையில் (ஒழுங்கையும், சமாதானத்தையும் நிலைநிறுத்தி) சுமுகமாக இருங்கள். (இதில்) அல்லாஹ்வுக்குப் பயந்துநடவுங்கள் (இதனால்) அவனுடைய கிருபையைப் பெறலாம்!'

- அல்குர்ஆன் 49 ; 10

'அன்றி நீங்கள், அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் வழிப்பட்(ட்)டு (உங்களுக்குள் ஒற்றுமையாய் இரு)ங்கள். உங்களுக்குள் தர்க்கித்துக் கொள்ளாதீர்கள்....!'

- அல்குர்ஆன் 8 ; 46

'மேலும், நீங்கள் யாவரும் (ஒன்றுசேர்ந்து,) அல்லாஹ்வுடைய (வேதமாகிய) கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக்கொண்டு,) நீங்கள் பிரிந்துவிட வேண்டாம்.....'

- அல்குர்ஆன் 3 ; 103

நேரத்துக்கு நேரம் நிறத்தை (கொள்கையை) மாற்றிக்கொள்வதென்பது ஒரு முனாபிக் - நயவஞ்சகத்தனமான செயலாகும்!

'(விசுவாசிகளே!) நயவஞ்சகர்களைப்பற்றி நீங்கள் ஏன் இருவகை (அபிப்பிராய)ப்படுகிறீர்கள்? அவர்கள் செய்த தீவினையின் காரணமாக, அல்லாஹ் அவர்களைத் தலைகுனியும்படி செய்தான்....'

- அல்குர்ஆன் 4 ; 88

அன்றைய நயவஞ்சகர்கள் தலைகுனியச் செய்யப்பட்டு இழிவடைந்தார்கள். இனிமேலும் அப்படியானவர்கள் தலைகுனிய வைக்கப்பட்டு இழிவை அடைவார்கள்; அதனை நாம் கண்கூடாகக் கண்டும் வருகிறோம் - இது இறைவனின் நியதியாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தங்களது நயவஞ்சகச் செயல்களின் காரணமாக இறை சட்டங்களை நிராகரித்துக் கொண்டிருப்பதுபோல, உண்மை முஸ்லிம்களும் நிராகரிப்பவர்களாக ஆகி - தங்களுக்குச் சமமானவர்களாக மாறிவிட வேண்டுமென்பதே அந்நயவஞ்சகர்களின் விருப்பமாகும் என்பதை அல்குர்ஆன் (4;89) அழகாக எடுத்துக் கூறுகிறது.

**முஸ்லிம் நாடு; முஸ்லிமல்லாத நாடு !**

"வேலைக்கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டாம்" என்பதுபோல சிலர் - இஸ்லாத்தை அனுசரித்து நடப்பதில் நாட்டமற்றவர்கள் சொல்கின்ற ஒரு பசப்பு வார்த்தைதான் "ஒரு முஸ்லிம் நாடாகவிருந்தால், இஸ்லாத்தை எல்லாத் துறைகளிலும் அனுசரித்து நடக்கலாம்; இந்த நாட்டில் அவ்வாறு செய்யவியலாது!" என்ற கூற்று!

குப்பைத் தொட்டியில் வழுக்கி விழுந்த ஒரு குடிகாரன் 'வாழ்க்கை என்பதே கந்தல் நிறைந்த கழிவுச் சாக்கடைதான்' என்று கருதுவதுபோல, கு.'.ப்.'.பார்களின் சிந்தனைக்கு வயப்பட்டவர்கள், 'அரசியல் ஒரு சாக்கடை' என்று சொல்கிறார்கள்! மேலும், சிலர் விஷயத்தைச் சரியாகப் புரிந்திருந்தும், தம்ஜீவனம் நடந்தேற வேண்டும் என்பதற்காகவும் அப்படிக் கூறுவதுண்டு!

இஸ்லாத்தின் அடிப்படைகளையே ஆட்டம் காணவைக்கும் விஷயங்களில்கூட, "ஈதென்ன முஸ்லிம் நாடா?" என்று கூறி அதனைத் தட்டிக்கழித்து - பூசி மெழுகிவிடும் முக்கியஸ்தர்களையும் பார்க்கிறோம்!

முழு உலக முஸ்லிம்களையும் எடுத்துக்கொண்டால், அவர்கள் இரண்டுவிதமான நிலையில் உள்ளனர். ஒரு சாரார் தாருள் இஸ்லாத்தில் - இஸ்லாமிய ஆட்சியின்கீழ் வாழ்பவர்கள்; அடுத்த சாரார் தாருள் கு.'.ப்ரில் - முஸ்லிம் அல்லாதவர்களின் ஆட்சியின்கீழ் வாழ்பவர்கள்.

இவர்களிடையே அரசியல் ரீதியாகவும், வெளிநாட்டுத் தொடர்புகள் விஷயத்திலும் சில வித்தியாசங்கள் இருக்கவே செய்யும்; குறிப்பாக அரசாங்க அமைப்பில் இஸ்லாமியச் சட்டங்களை அமுல்படுத்த முடியாத நிலை, தாருள் குப்ரில் வாழும் முஸ்லிம்களுக்கு ஏற்படலாம். ஆனால், அவர்களது வாழ்வில், இஸ்லாம் காட்டும் ஒழுக்கவிதிமுறைகளை அரசியல் ரீதியாகப் பின்பற்ற எவ்விதத் தடையுமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு அரசும், ஒழுக்கமாக, நீதி; நியாயத்துக்கு மதிப்பளித்து வாழும் மக்களை அப்படிச் செய்யாதீர்கள் என்று சொல்லாது. மாறாக அப்படியான உன்னத மக்களை உவந்தேற்றுக் கண்ணியப்படுத்தவே செய்யும்!

நமது நாடு, தாருள் குஃப்ர் - அதாவது முஸ்லிமல்லாதவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு; அவர்களின் நம்பிக்கைக்கேற்ப ஆளப்படும் ஒரு பிரதேசமாகும். இங்கு ஆட்சிமன்றத்திலே இஸ்லாமிய அரசியல் அமைப்பைக் கொண்டுவர முடியாது.

மற்றப்படி அல்லாஹ்வின் கிருபையால், அரசியல் உட்பட வாழ்வின் எல்லாத் துறைகளிலும் இஸ்லத்தைக் கடைப்பிடித்தொழுக எந்தத் தடையும் கிடையாது; ஆனால், முஸ்லிம்கள்தான் அதற்குத் தடையாக இருக்கின்றனர் என்பது - வெட்கத்தோடு ஒப்புக்கொள்ள வேண்டிய ஒரு விஷயமாகும்!

இந்த நாட்டில், இஸ்லாத்தைக் கடைப்பிடித்துவாழ நமக்குக் கிடைத்திருக்கின்ற சுதந்திரம் - அல்லாஹ்வினால் தரப்பட்ட ஒரு பெரிய நிஃமத்தாகும். உலகின் சில நாடுகளிலே, அடிமட்ட வாழ்வில்கூட இஸ்லாத்தை அனுசரித்து நடக்க முஸ்லிம்கள் அனுமதிக்கப்படாத நிலையும் இருந்ததுண்டு.

தாஜுகிஸ்தான், கஜாகிஸ்தான், துருக்மேனிஸ்தான், அல்பேனியா போன்ற பல நாடுகள் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவை; முஸ்லிம் ஆட்சிகள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் நடைபெற்ற பிரதேசங்கள்!

அவை நாஸ்திக - சோவியத் ஒன்றியத்தில் இணைந்தபிறகு, இஸ்லாத்தின் - முஸ்லிம் சமுதாயத்தின் அடிப்படை உரிமைகள்கூடப் பறிக்கப்பட்டு, எமது இளைஞர்களுக்கெல்லாம் நாஸ்திகவாதக் கருத்து ஊட்டப்பட்டு உருக்குலைக்கப்பட்டனர்; இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்து, மக்களுக்கு அறிவூட்டவும் அனுமதிக்கப்படவில்லை! (73 ஆண்டுகளின் பின்னர் நிலைமை மாறி வருகிறது.)

அன்பர்களே! அந்த நிலைமை நமக்கு - இன்று இந்த நாட்டில் இல்லை. ஆனால், நாமே நமது நிலையைத் தாழ்த்திக் கொள்கிறோம்! எதிர்காலம் எப்படியோ அல்லாஹ்தான் அறிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக, "முஸ்லிம் நாட்டில் முடியும்; முஸ்லிமல்லாத நாட்டில் முடியாது" என்பதெல்லாம், வெறும் லேபல் முஸ்லிம்களின் பித்தலாட்டமேயாகும். அல்லாஹ் தந்த நிஃமத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்வது - பின்னர் நமக்குச் சோதனைகளும், வேதனைகளும் ஏற்படுவதற்கு ஏதுவாகவும் அமையலாம்.

'மனிதர்களின் கைகள் தேடிக்கொண்ட (தீ)வினையின் காரணமாகக் கடலிலும், தரையிலும் தீமைகள் தோன்றிவிட்டன. (அவற்றிலிருந்து) அவர்கள் விலகிக் கொள்ளும் பொருட்டு, அவர்களின் (தீ)வினைகளில் சிலவற்றை அவர்கள் (இம்மையிலும்) சுகிக்கும்படி அவன் செய்கிறான்.' - அல்குர்ஆன் 30 ; 41

மக்கள் தங்கள் கரங்களாலும் - செயல்களாலும் தீமை - மோசடி - பித்தலாட்டங்களில் ஈடுபட்ட காரணத்தினால் கடல், கரை, தரை, முதலான அனைத்திலும் அராஜகமும், குழப்பமும் தோன்றிவிட்டன. இவை நம் கண்முன்னே கண்டுகொண்டிருக்கும் காட்சிகளாகும்!

அடுத்து அல்லாஹ் சொல்கிறான் -

'(நபியே!) நீர் கூறும்: பூமியில் நீங்கள் சுற்றித் திரிந்து பாருங்கள்; (உங்களுக்கு) முன்னிருந்தவர்களின் முடிவு எவ்வாறாயிற்று?.....' - அல்குர்ஆன் 30 ; 42

நீதி, நேர்மைகளை மதிக்காமல் மறவழி சென்ற மன்னாதி மன்னர்களும், மற்றும் மேட்டுக்குடியினரும் என்னவானார்கள்; அவர்கள் குடியிருந்த கோட்டை கொத்தளங்கள் எங்கே போய்விட்டன? என்பனவற்றை உலகைச் சுற்றிப்பார்த்து - அழிவுச் சின்னங்களைக் கண்டு, சரித்திரங்களைப் படித்துப் படிப்பினை பெறுமாறு இறைவன் கூறுகின்றான்.

'எந்த மக்களும் தங்கள் நிலைமையை மாற்றிக்கொள்ளாத வரையில், நிச்சயமாக அல்லாஹ்வும், அவர்களுக்குப் புரிந்த அருளை மாற்றிவிடுவதில்லை.......'

- அல்குர்ஆன் 8 ; 53

எந்த மக்களுக்கும் அல்லாஹ் அருள்புரிந்து, அவர்களை மேம்படுத்திவைத்தால், பின்னர் அவன் தான் புரிந்த அருளை மாற்றிவிடுவதில்லை; ஆனால், அம்மக்கள் அல்லது சமுதாயத்தினர் நன்றி மறந்த நயவஞ்சகர்களாகித் தங்களுடைய நடத்தைகளை மாற்றிக்கொள்ளும் போது, அல்லாஹ்வும் தான் புரிந்த அருளை மாற்றிவிடுகின்றான் என்பதை மேற்கண்ட ஆயத்து துல்லியமாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் நாடுகளில் வேறெந்த நாட்டிலுமில்லாத அளவு - இந்த இலங்கைத் திருநாட்டிலே - ஆதித் தந்தை ஆதம் (அலை) வந்திறங்கிய நாட்டிலே எம்மை அல்லாஹ் மேன்மைப்படுத்தி வைத்திருக்கிறான்.

சில காலங்களுக்கு முன், இந்த நாட்டிலுள்ள ஏனைய சமுதாயங்கள் எம்மைக் குறைத்து மதிப்பிடவோ, ஏழனமாகப் பார்க்கவோ, சந்தேகக் கண்கொண்டு நோக்கவோ முடியாதவாறு எம் நிலையிருந்தது; ஆனால், இன்றோ கொஞ்சம் கொஞ்சமாக அந்நிலை மாறிவருவதை உணரக்கூடியதாயுள்ளது!

இன்று பல சமுதாயங்கள் எம்மை ஏழனமாகப் பார்க்கின்றன - சந்தேகக் கண்கொண்டு நோக்குகின்றன - கைகொட்டிச் சிரிக்கின்றன!

ஏனிந்த நிலை? அதற்குக் காரணமென்ன? ஆம்! இன்று வாழ்வின் பல துறைகளில் இஸ்லாத்தை ஒதுக்கி முதுகுப்புறம் கொண்டு வந்துவிட்டோம்! முன்னுக்கு தொழுகை, ஹஜ் இவ்விரண்டையும் காண்பித்துக்கொண்டு இஸ்லாத்தின் பெரும்பகுதியை உதாசீனப்படுத்திவிட்டோம்! அதிலும் ஹஜ் என்பது ஒருவிதக் கேலிக்கிடமானதாக ஆக்கப்பட்டுவிட்டது! எஞ்சியுள்ள தொழுகையை எடுத்துக்கொண்டால் அதுவும்கூட உயிரோட்டமுள்ளதாக - தற்போதைய மனிதர்களில் பதிந்து காணப்படவில்லை!

ஏன், எப்படி உயிரோட்டம் வரும்? முதல் அம்சமான ஈமான் உறுதிப்பட்டு - வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் இஸ்திரமடைந்தால்தானே, ஏனைய அடிப்படைக் கடமைகளின் நாடிநரம்புகள் இரத்த ஓட்டம்பெற்று ஜீவத் துடிப்படையும்!

**அரசியல் ஓர் அமானிதம்**

'நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் (அறிந்தும் புரிந்தும்) வஞ்சனை செய்யாதீர்கள். அறிந்துகொண்டே உங்களுடைய அமானிதங்களில் நம்பிக்கைத்துரோகம் செய்யாதீர்கள்' (அல்குர்ஆன் 8; 27) என இறைவன் கண்டிப்பான கட்டளை பிறப்பித்துள்ளான்.

இங்கே "அமானிதங்கள்" என்பதற்கு முஃபஸ்ஸிரீன்கள் விளக்கம் தரும்போது -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்மீது நம்பிக்கை வைத்து ஒப்படைக்கப்படும் அனைத்துப் பொறுப்புக்களையும் குறிக்கும் என்றும், அவை:

ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது தொடர்பான பொறுப்புக்களாயிருந்தாலும் சரி -

அல்லது கூட்டு ஒப்பந்தங்களின் பொறுப்புக்களாயினும் சரி -

அல்லது, ஓர் அமைப்பின் இரகசியங்களாயினும் சரி -

அல்லது, ஒரு தனிநபர் மற்றும் பொதுமக்களுக்குரிய பொதுச் சொத்துக்கள் சம்பந்தப்பட்டதாயினும் சரி -

அல்லது, ஒரு தனிமனிதன்மீது நம்பிக்கை வைத்து அவரிடம் ஒப்படைக்கப்படும் பதவிப் பொறுப்புக்களாயினும் சரி -

அனைத்தும் அமானிதங்களேயாகும் என்று சொல்கிறார்கள்!

*'நாம் இந்த அமானிதத்தை வானங்கள், பூமி, மற்றும் மலைகள் ஆகியவற்றின் முன்பாக வைத்தபோது அவை அதனை ஏற்கத் தயாராக இல்லை. மேலும் அதனைக் கண்டு அஞ்சின ஆனால், மனிதன் அதனை ஏற்றுக்கொண்டான்...'*

- அல்குர்ஆன் 33 : 72

இந்த ஆயத்திலும்கூட முப'.ஸ்ஸிரீன்கள் விளக்கம்கூறும்போது 'அமானத்' என்பதன் பொருள்: 'அல்லாஹ் தன்னுடைய பூவுலகில் மனிதனுக்குப் பகுத்தறிவும், *அதிகாரங்களும்* வழங்கி, அவனிடம் ஒப்படைத்திருக்கும் சுமையைக் குறிக்கும்' என விபரித்துள்ளனர்.

அரபுக் கலைச்சொல் அகராதியிலும்கூட "அமானத் - நம்பி ஒப்படைக்கப்பட்டது" என்பது இதன் பொருள் என்றும்: இது விரிவான கருத்துக்களைக்கொண்ட ஒரு சொல்லாகும் என்றும்; அல்லாஹ் தன் அடியார்களிடம் ஒப்படைத்திருப்பவை யாவும் இதில் அடங்குமென்றும்; சமுதாயமோ, தனிநபரோ - ஒரு மனிதரிடம் ஒப்படைத்திருப்பவை. அவை பொருட்களாயினும் சரி, பொறுப்புக்களாயினும் சரி, பதவி - ஆட்சி - அதிகாரம் அனைத்தும் இதில் அடங்குமென்றும் கூறப்பட்டுள்ளது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுச் சொத்து

பொதுச் சொத்து என்பது, இஸ்லாத்தினுடைய ஆன்மீக, அரசியல் அம்சங்களில் முக்கியமான ஒன்று. இதில் மிகவும் பேணிப்பாக நடந்துகொள்ள ஒவ்வொரு முஸ்லிமும் கடமைப்பட்டுள்ளனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருநாள் இரவு - பொதுச் சொத்து விவகாரத்தில் நடந்துகொண்ட முன்மாதிரியானது, நாமெல்லாம் சிந்தித்துச் செயல்படுத்தப்படவேண்டிய ஒரு சம்பவமாகும்.

ஓரிரவு அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள். அப்பொழுது, பொது நிதியிலிருந்து பெறப்பட்ட விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவ்வேளை, ஒரு தனிப்பட்ட விவகாரம் சம்பந்தமாகக் கதைக்க வந்திருந்தார் ஒரு தோழர். அச்சமயம் அந்த விளக்கை அணைத்துவிட்டு, தன்னுடைய செலவில் எண்ணெய் ஊற்றப்பட்ட விளக்கை உபயோகித்தார்கள் ஜனாதிபதி உமர் (ரலி) அவர்கள்.

என்றால், பொதுநிதி சம்பந்தமாக எவ்வளவு தூரம் உன்னிப்பாக முஸ்லிம்கள் செயலாற்ற வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

அதேபோன்று ஆயிரமாயிரம் சஹாபாக்களின், முற்போக்கான அரசியல் நடவடிக்கைகள் வரலாறெங்கும் விரிந்து காணப்படுகின்றன.

அதனால்தான் -

பாரதநாட்டின் தேசபிதா மகாத்மாகாந்தி அவர்கள், 'உமரின் ஆட்சியைப் பின்பற்றுங்கள்! என்று தமது காங்கிரஸ் கட்சித் தோழர்களுக்கு அறிவுரை பகர்ந்தார்.

இன்று, உலகில் மக்கள் வறுமையால் வாடுவதற்கும், பொருளாதார நெருக்கடி தோன்றியிருப்பதற்கும் பொதுச் சொத்துக்கள் சூறையாடப்படுவதும், வீண்விரயமாக்கப்படுவதும் ஒரு காரணியாகும்.

உயர்பீடத்தில் - மக்களின் மத்திய இஸ்தானத்தில் அமர்ந்திருப்போரின் அவசியமற்ற பிரயாணங்கள், சுற்றுலாக்கள் - கேளிக்கைகள் - களியாட்டங்கள், விருந்துகளில் மக்கள் பணம் எவ்வளோ நாசமாக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிப்பட்ட - அவசியமற்ற விடயங்களில் மக்களின் பொதுப்பணம் - அல்லாஹ்வின் அமானிதம் பாழாக்கப்படுவதும், இன்றைய உலகில் பொருளாதார வீக்கம் காணப்படுவதற்குரிய காரணிகளில் ஒன்றாகும்!

பொதுச் சொத்துக்களின் பாதுகாவலர்கள் இவ்விடயத்தில் மிகமிக எச்சரிக்கையாக இருக்கவேண்டியவர்களாகிறார்கள். தவறி, 'வேலியே பயிரை மேய்வது' போல நடந்துகொண்டால் - எப்படியோ உங்களுடைய உருட்டுப் பிரட்டுக்களினால் இந்த உலக வேதனைகளிலிருந்து தப்பிக் கொண்டாலும் மறுவுலகில் - பாம்பும், தேளும் வேதனை செய்யும் நரகம்தான்; இதில் சந்தேகமில்லை! சிலவேளை இவ்வுலகிலும் அதற்கான தண்டனை இறைவனால் வழங்கப்படலாம்!

பொது நிறுவனங்களில் - பள்ளிவாசல், பொது நிதியம், அரசாங்கத்தின் சொத்துக்கள் - இவைபோன்ற அனைத்திலும் வீண்விரயம் செய்தோ 'அல்லது கையாடல் புரிந்தோ அல்லது குறைந்த செலவில் ஒரு வேலைத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டு, கூடுதல் பெறுமதி காட்டி - மிகுதியைச் சுருட்டிக் கொள்வதோ - அவைபோன்ற அனைத்தும் அல்லாஹ் அங்கீகரிக்காத - ஹராமான செயல்களாகும்!

சிலர் சொல்வார்கள் -

"இஃது அரசாங்கப் பணம்தானே, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்!" என்று எமது முன்னோர் சொல்லிவைத்தது என்ன பிழையா?" என.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை மார்க்கச் சொத்து, அரசாங்கச் சொத்து, முஸ்லிம்களின் சொத்து, காபிர்களின் சொத்து, முஸ்லிம் அரசாங்கத்தின் சொத்து, காபிரான அரசாங்கத்தின் சொத்து என பொதுநிதியங்கள் பிரிக்கப்பட்டில்லை.

ஒரு முஸ்லிம் எங்குவாழ்ந்தாலும், எவ்விடத்தில் வசித்தாலும் அல்லாஹ் அங்கீகரிக்காத ஒன்றை அவர்கள் செய்வது குற்றமேயாகும். இக்குற்றம் இம்மையோடு மட்டும் நின்றுவிடப்போவதில்லை; மறுமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கடூரமாகத் தண்டிக்கப்படவே செய்வர். சிலவேளை இவ்வுலகிலும் அதற்கான தண்டனை பலவிதங்களில் கிடைக்கவும் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'(நபியே! பிரார்த்தித்து) நீர் கூறுவீராக: எங்கள் இறைவனே! சகல நாடுகளுக்கும் அதிபதியே! நீ விரும்பியவர்களுக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய்; நீ விரும்பியவர்களிடமிருந்து ஆட்சியை நீக்கிவிடுகின்றாய், நீ விரும்பியவர்களைக் கண்ணியப்படுத்துகின்றாய்; நீ விரும்பியவர்களை இழிவுபடுத்துகின்றாய். நன்மைகள் யாவும், உன் கையில்தான் இருக்கின்றன. நிச்சயமாக நீயே யாவற்றின்மீதும் பேராற்றலுடையோன்.'

- அல்குர்ஆன் 3 : 26

மேற்கண்ட இறைவசனத்தின்படிதான், உலக அரசியல் நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன. அவற்றினை நாம் கண்கூடாகக் கண்டுவருகிறோம்.

அரசியலை ஒரு சாக்கடையாக்கி, அதில் மனிதன் எத்தனையோ - விதவிதமான சாகஸங்களைப் புரிந்து வருகிறான்; ஆனால், அதில் எவரும் நிலைத்து நின்றது கிடையாது!

பொதுமக்களின் மத்திய இஸ்தானமான இந்த அரசியலைக் கழிவுநீரும், மலசலமும் வடிந்தோடும் சாக்கடையாக்கி சல்லாபமாடியவர்கள் அனைவரினுடைய இறுதி முடிவும் மிக மோசமானதாகவே ஆகியுள்ளது; உலக அரசியல் வரலாற்றைப் புரட்டினால் இதனைப் புரிந்துகொள்ளலாம்.

அரசியலின் நோக்கம், குடிமக்களிடையே ஒழுங்கை நிலைநிறுத்தி, ஒழுக்கத்தை வலியுறுத்தி அமைதி காப்பதாகும்! ஆதலால்தான் இஸ்லாம் அதனை - அரசியலை ஓர் இபாதத்தாக - வணக்கமாகக் கருதுகிறது. இந்த வணக்கத்தை உரியமுறையில் நிறைவேற்றவேண்டியது, அரசியலில் ஈடுபட்ட முஸ்லிம்களின் கடமையாகும். அதனை மீறினால் மறுமையில் விசாரணை செய்யப்பட்டுத் தண்டனைக்குள்ளாவதுடன், இந்த உலகத்திலும் இழிவுக்குள்ளாகலாம்!

உலகம் நாடுகளாலும், தேசங்களாலும் பிரிக்கப்பட்டு, பல்வேறு ஆட்சிகளால் ஆளப்படுவதனால், அவற்றினிடையே ஏற்படக்கூடிய வெளிநாட்டுத் தொடர்புகளையும் பற்றி அல்குர்ஆன் பேசுகிறது; (17;34, 60;9, 42;41 போன்ற ஆயத்துக்களிலும், சூரா அந்நஹ்ல், சூரா அத்தௌபா, சூரா அன்ஃபால், சூரா அல்மாயிதா, சூரா அல்பகரா முதலிய அத்தியாயங்களிலும் பார்க்குக!) அது மிகவும் நேர்மையானதாகவும், கண்ணியமிக்கதாகவும் இருத்தல் வேண்டுமெனக் கட்டளையிடுகின்றது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறுபட்ட சமுதாயங்களிடையே, அவரவர் உரிமைகளை வழங்கி, சுமூக நிலை, உறுதிப்படுத்தப்படல் வேண்டுமெனவும் அல்குர்ஆன் வலியுறுத்துகிறது; (17;33, 49;11-12, 49;6 ஆகிய ஆயத்துக்களிலும் சூரா-அல்பகரா, அன்னிஸா, யூனூஸ், அல்அன்ஆம் முதலான அத்தியாயங்களிலும் காண்க!)

*அவைபோல -*
*அரசியலின் நோக்கம்*
*அதன் அடிப்படை*
*சட்டமும் கீழ்ப்படிதலும்*
*கிலா:.பத் - பிரதிநிதித்துவ ஆட்சிமுறையின் அந்தஸ்து*
*கலந்தாலோசித்தல்*
*அரசியலில் பதவிவகிப்போருக்கான தராதரம்*
*உத்தியோகஸ்தர்களுக்கான ஒழுக்கவிதிகள்*

- என்பன போன்ற, அரசியலின் பல்வேறு அம்சங்கள் பற்றியெல்லாம் இஸ்லாம், உலக மக்களை நோக்கி அறைகூவிக்கொண்டிருக்க, நாம் அதனை “ஒரு சாக்கடை” என்று எவ்வாறு சொல்ல முடியும்? ஓர் உண்மையான முஸ்லிமின் நாவுதான் எழுமா? சற்றுச் சிந்தியுங்கள்!

**யானை விழுங்கிய விளாங்காய்**

அரசியலை ஒரு “சாக்கடை” என்பவர்கள்; அக்கூற்றினை ஓங்கி முழங்குபவர்கள், “யானை விழுங்கிய விழாங்கா”யாக சமுதாயத்தை உறிஞ்சித்தம் பசியைத் தீர்த்துக் கொள்பவர்கள்!

யானை விளாங்காயை முழுசாக (உடைக்காமல்) சாப்பிடும். அதாவது, விழுங்கும். வயிற்றுனுள் ஜீரணித்து மலத்தோடு வெளியான பின்னரும், அது முழு விளாங்காயாகவே காட்சி தரும். ஆனால், உருவம் விளாங்காயாக விளங்குமே தவிர, உள்ளே ஒன்றுமே இருக்காது; வெறும் கோதுதான்! சக்கை சாறு அனைத்தையும் - கோது உடையாமல் அப்படியே இருக்க உறிஞ்சிவிடக்கூடிய - ஆவியாக்கி ஜீரணித்துக்கொள்ளக்கூடிய இயல்பு கொண்டது யானை!

சமுதாயம், பார்வைக்கு என்னவோ மேனி மினுக்காகத்தான் தெரிகிறது. ஆனால், உள்ளே சக்கையும் இல்லை; சாறும் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் நாடுகளில், கடந்த காலங்களிலே எத்தனையோ, மன்னர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள், அமைச்சர்கள், உறுப்பினர்கள் இஸ்லாத்தைச் சொல்லியே பதவிக்கு வந்துள்ளனர்; அந்த நிலையை அடையும்வரை இஸ்லாத்தின் உயர்வைப் பற்றி உரத்து முழங்கிக் கொண்டிருப்பார்கள். பின்னர் ஆசை நிறைவேறி ஆட்சியையும் கைப்பற்றியதும்தான் தாமதம், அந்தக் கோஷம் எங்கேயோ போய் மறைந்துவிடும்!

'எங்கே, நீங்கள் சொல்லியதைச் செயற்படுத்துங்களேன்?' என்றால், "அரசியல் ஒரு சாக்கடை; மார்க்கமோ புனிதமானது!" என்று மழுப்புவது அவர்களது வழக்கமாக - அரசியல் சாணக்கியமாக இருந்துவந்துள்ளது!

இப்படிப்பட்டவர்கள், யானைவிழுங்கிய விளாங்காய் போன்று சமுதாயத்தை சக்கையும், சாறுமற்ற வெறுங்கோதாக மாற்றிவிட்டனர்!

எனவே -
*'அரசியல் ஒரு சாக்கடை'*
*என்ற,*
*உலகோர் பலரின் :*
*நாசகாரக் கூற்றுக்கு விரோதமாக,*
*'அ'.து ஓர் இபாதத்' - என்ற*
*உணர்வோடும், பயபக்தியோடும்,*
*உண்மை முஸ்லிம்கள் செயல்படுகிறார்கள் ;*
*இ'.து அவர்களுடைய தனித்துவம் !*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகுப்புரை

'லாயிலாஹ இல்லல்லாஹ் - முஹம்மதுர்ரசூலுல்லாஹ் !
என்கிற இவ்வார்த்தையை
ஒரு மனிதன் - (அவன் எம்மதத்தவனாயினும்)
அதனை ஏற்றுக்கொண்டு,
உளப்பூர்வமாக மொழிந்தவுடனேயே,
ஓர் அலாதியான மாற்றத்தைப் பெறுகிறான் !
குல, கோத்திரத் தடைகளைத் தாண்டுகிறான் !
ஜாதி, இன, மத மாச்சரியங்களிலிருந்து,
விடுதலை பெறுகிறான் !
மொழி, வழி, தொழில் வேறுபாடுகளிலிருந்து அகலுகிறான் !
நாடு, தேசம், கண்டம் என்ற -
இரும்புக் கூண்டிலிருந்து வெளிப்படுகிறான் !!
சகல தடைகளையும் தகர்த்தெறிந்து - ஒரு
சர்வதேசப் பிரஜையாக மாறுகிறான் !!!
இப்பொழுது, இந்த உலகம் - அவனுக்கு,
- அல்லாமா இக்பால் பாடுவதுபோல :

چین و عرب ہمارا ہندوستاں ہمارا     مسلم ہیں ہم وطن ہے سارا جہاں ہمارا

(சீன் வ அரப் ஹமாரா, ஹிந்துஸ்தான் ஹமாரா
முஸ்லிம் ஹை(ன்) ஹம், வதன் ஹை ஸாராஜஹான் ஹமாரா !)
சீனமும், அரேபியாவும் எங்கள் நாடு
சீர்மிகு இந்தியாவும் எங்கள் நாடு
சீலம் செறிந்த முஸ்லிம்கள் நாங்கள்
சர்வலோகங்களும் எங்கள் நாடே !
என்றாகிறது !
ஆம் !
உலகம் முஸ்லிம்களுடையது ;
முஸ்லிம்கள் உலகுக்குரியவர்களாகிறார்கள் !
ஆதலால் -
இகமென்னும் இந்த எழிற்பூஞ்சோலையில்,
இனியகீதம் (இறைமறையின் இன்பநாதம்)
இசைத்து அகமகிழ்பவர்கள் முஸ்லிம்கள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான ஒரு தனித்துவத்தின் அடிப்படையில்
இஸ்லாமிய சமூக அமைப்பு அமை ந்துள்ளது.
அது முஸ்லிம்கள் நிறைந்த நாட ாயினு ம் -
அல்லது முஸ்லிம்கள் சிறுபான்மை யாக வாழும் நாடாயினும்,
இவ்விடயத்தில் ஒரே வழிமுறைத ன் ;
அதில் மாற்றமில்லை ! *
அதிலும், முஸ்லிம்கள் சிறு தொகையினராக வாழும் நாட்டில்
இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த -
ஒரு கண்டிப்பான ஒன்றாகவிருக்கின்றது.
ஏனெனில் -
இஸ்லாத்தை அறிய வாய்ப்பில்லாதிருக்கிற மக்களுக்கு,
அதனை எடுத்து விளக்கவேண்டியது,
முஸ்லிம் சமூகத்தின்மீது -
் பர்ளுகிபாயாவாக இருந்துகொண்டிருக்கின்றது.
இந்தக் கடமை -
வெறும் பிரசங்கம்,
அல்லது எழுத்துக்கள்
மூலமாக மட்டும் நிறைவேறிடாது !
முஸ்லிம்களாகிய நாம்
எந்த சத்தியத்திற்காகச் சான்று பகரவிருப்புகிறோமோ,
அந்த சத்தியத்தளவில் -
சமுதாய அமைப்பு முறையிலும்,
ஒழுக்கம், கண்ணியம், கடமை, கட்டுப்பாடு -
அரசியல் நடவடிக்கை, பொருளாதாரத் தேட்டம்
எல்லாவற்றிலும், நிலையான சான்றுபகரக் கடமைப்பட்டுள்ளோம்.
எமது - சமூகத்தின் ஒழுக்க நடைமுறைகளைப் பார்த்து,
அதன் - மனிதாபிமானமிக்க செயல்முறைகளைக் கண்டு,
அதன் - அரசியல் ரீதியான நேர்மையை நோட்டமிட்டு,
அதன் - பொருளாதார ரீதியான தூய்மையைத் துலங்கி,
அதன் - இனமாச்சரியங்களற்ற இளகிய தன்மையை அறிந்து,

---

* - கொடுங்கோல் ஆட்சியினால் - அடாவடித்தனமான அட்டகாசங்களினால் நெருக்குதல்களுக்குள்ளாகி - அடக்கியொடுக்கப்பட்டாலே ஒழிய, அந்த அமைப்பு முறையில் மாற்றமில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் - பெண்குலத்தின் பெருமையை உணர்ந்து,
அதன் - கல்விமான்களின் மேன்மையைப் புரிந்து,
அதன் - மார்க்க அறிஞர்களின் நாகரிகமான நடத்தைகளை விழித்து,
அதன் - மாணவ சமுதாயத்தின் ஒழுக்கமுறைகளை உற்றுநோக்கி,
அதன் - அரச ஊழியர்கள் நடந்துகொள்ளும் இங்கிதத்தை இரசித்து,
இவ்வாறு செயல்வடிவமான எமது சான்றுபகர்தல் (த.்.வா) மூலம்,
'கு.்.ப்.்.பார்கள்' இஸ்லாத்தைப் புரிந்துகொள்ள -
நாம் வழிவகுக்க வேண்டும் !
இல்லையேல் -
நாளை மறுமையிலே குற்றக் கூண்டில்,
நிறுத்தப்படவேண்டியது முஸ்லிம் சமுதாயம்தான் !
ஆகவேதான் -
'இந்த நாட்டில் 'கு.்.ப்.்.பார்கள்' உள்ளனரா ?
எனக் கேட்கத் தோன்றுகிறது !
ஏனெனில் -
சரியான சான்றுகளுடன்,
அல்லாஹ்வின் மார்க்கத்தைத் தம் வாழ்வின் மூலம்,
நிரூபித்துக் காண்பித்த பின்னர்,
அவர்கள் மறுப்பார்களானால்,
அப்போதுதான் அவர்கள் கா.்.பிராகிறார்கள் ;
அந்தவிதமான - செயல்பூர்வமான
சான்று பகர்ந்து நிரூபிக்காமல்,
வெறும் பேச்சினால் - எழுத்தினால் மட்டும்
இரண்டொரு பிரச்சாரத்தை மேற்கொள்வோமானால்,
'ஒவ்வொரு மதத்தினரும், தத்தமது மதத்தை
மேன்மைப்படுத்தி விளம்பரம் செய்வது சகஜம்தான்'
என்று கா.்.பிர்கள் வாழாவிருந்துவிடுவர் ;
அப்படித்தான் இப்பொழுதும் இருந்து வருகிறார்கள் !
அத்துடன் -
இன்றைய உலகில் - முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள்
தவிர்ந்த ஏனைய சமயத்தினர்கள் அனைவரிடத்திலும்
புரையோடிப்போயுள்ள ஒரு கருத்து ;
'எல்லா நதிகளும் பல்வேறு கோணங்களிலிருந்து,
ஊற்றெடுத்துப் பாய்ந்துவந்தாலும்,
அவையனைத்தும் ஆழ்கடலில் வந்து வீழ்ந்து,
சங்கமமாவதைப்போல -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மதங்களும் இறுதியில்
இறைவனையே அடைகின்றன !' என்பது.
இந்தத் தவறான கருத்தை - வெறும்
பிரச்சாரத்தினால் மட்டும் அகற்றிட முடியாது ;
சமுதாய ரீதியான - மனித வாழ்வின் பல்வேறு துறைகளிலும்
எடுத்துக்காட்டான - நடைமுறையிலான,
முன்மாதிரிகள் மூலமே தகர்க்க முடியும் !
உலகத்திலுள்ள மக்களெல்லாம் - ஒன்று
மதவாதிகளாக வாழ்கிறார்கள் ; அல்லது,
மதமற்ற நாத்திகர்களாகவுள்ளனர் !
ஆனால் -
முஸ்லிம்கள் மட்டும் - மாறாக,
நாத்திகர்களுமல்ல ; மதவாதிகளுமல்ல !
'தீனுல் இஸ்லாம்' என்னும், இயற்கை மார்க்கத்தில்
இறைவனுடைய கற்பனையில் உருவான - அந்த
நிரந்தர வழியில் வாழ்கிறார்கள் !
இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னே -
இந்தியாவின் பிரபல அரசியல்வாதி
ஶ்ரீ ராஜ் நாராயணன் அவர்கள்
டில்லியில் நடந்த மீலாத் விழாவில் பேசும்போது -
'யா அல்லாஹ் ! இப்படியான ஒரு மார்க்கம் இருப்பதாகவும்,
இந்த நபி உண்மையானவர் என்றும்,
அவருடைய நடைமுறையைப் பின்பற்றினால்,
எப்படியான ஒரு சமுதாயம் உருவாகும்,
எப்படியான ஒரு அமைதி வாழ்வு கிட்டும்,
அதற்கு மாறுபடுவோர் - மறுமையில்,
எப்படியான தண்டனைக்காளாவர் ?
என்பனவற்றையெல்லாம்
எவரும் வந்து எம்மிடம் நிரூபித்துச் சொல்லவில்லையே ?
அப்படியிருக்க -
ஒன்றுமறியாத அப்பாவிகளான - உன்படைப்புக்களான
எங்களைக் குற்றம்பிடிக்கலாமா ?
உன் காருண்யத்திற்கு இது பொருந்துமா ?
உன் கருணைக்கு இது தகுமா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நாளை மறுமையில் கேட்பார்களே - அந்த மக்கள்,
அவர்களுக்குத் தலைமை தாங்குபவனாக நானிருப்பேன் !'
என்று கூறினார். *
இது கேட்பதற்கு ஹாஸ்யம்போல் இருந்தாலும்,
முஸ்லிம்களின் சிந்தனைக்குரியது,
என்பதை நாம் மறந்திடலாகாது !
நம்பிக்கை (ஈமான்) முதல்
ஐங்காலத் தொழுகையிலிருந்து,
அரசியல்வரை -
ஒரு முஸ்லிமுடைய வாழ்வின் எல்லாத் துறைகளிலும்
தனித்துவம் சிறப்பான இடத்தை வகிக்கிறது.
இது உலகோரை விட முற்றிலும் - ஓர்
அலாதிான அமைப்பாகும் !
ஆகவே -
ஒரு முஸ்லிமினுடைய வாழ்வு முழுமை பெறுவதற்கு,
இத்தனித்துவம் பேணப்படல் இன்றியமையாதது !
அவற்றில் சில பகுதிகளை மட்டும்
ஈங்கெடுத்தெழுதியுள்ளேன்
சமுதாயம் கரிசனையுடன்,
தனித்துவம் பேணுமானால்,
இந்தநாடே இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளும் !
நான் சொல்லுகிறேன் ; எழுதுகிறேன் - அந்தமட்டில்,
என்கடமை முடிந்தது ; ஆனால்,
அதனைச் செயல்படுத்துவதோ,
என்னுடையவும், உற்களுடையவும் நீங்காக் கடமை !
கடலில் கோடிக்கணக்கான அலைகள் எழும் ; விழும் !
மு.்.மின்கள் அனைவரும் - மடிதவற்காகவே தோன்றும்,
அலைகளைப் போன்றவர்கள்தான் ;
ஆனால், ஓர் இலட்சியத்தின் இஸ்தாபிதத்திற்காக -
வாழ்வின் எல்லாச் சுகங்களையும் துறந்து,
மனித இனத்தின் அடிமைத்தளை -
அறுக்கப்பாடுபடும் உத்தமர்கள் !

---

* - அல்லாஹ் நீதிமிக்கவன், கா.்.பிர்கள் அலறுவதுபோல, அவர்களுக்கு நிருபணமான வழிகாட்டுதல் கிடைக்கப்பெறாவிட்டால், தம்வாழ்வுமூலம் மற்றவர்களுக்கு வழிகாட்டவேண்டிய பொறுப்பை - அமானத்தை ஏற்றுள்ள முஸ்லிம் சமுதாயம் அக்குற்றத்தைப் பொறுப்பேற்க வேண்டி வரலாம் ; அல்லாஹ் கா.்.பிர்களுக்கும் அநீதி இழைக்கமாட்டான் என்பதை மனதிற் கொள்வோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் ஒருநாள் - மற்றவர்களைப் போலவே
மண்ணுக்குள் மறைந்தாலும்,
அவர்களால் அந்த மண் மணம் பெறுகிறது !
அந்த மண்ணை மூடியிருக்கும் விண்ணும்
அந்த விண்ணிலே வட்டமிடும் கதிரவனும் ;
கார்முகிலும் ; விண்மீனும், வட்டநிலாவும்
உள்ளளவும், அவர்கள் பெயரும் நிலைத்துநிற்கும் !
அவைகளெல்லாம், அழிந்தொழியும் -
'கியாமம்' ஏற்பட்ட பிறகும்கூட,
இறையோனின் விருந்தினர்களாக - அவர்கள்
என்றென்றும் இலங்கிக் கொண்டேயிருப்பர் !
நாமெல்லாம் வரலாறு தேர்ந்துவிட்ட வழிகாட்டிகள் !
சரித்திரம் தனது சுமையைத் - தோள்களில்
தூக்கி வைத்துவிட்ட பிறகு,
அதை எடுத்துக்கொண்டு நடப்பதுதான்,
நம்போன்றோரின் வேலை !
வரலாற்றில் மின்னும் வீரவரிகள் !
வெற்றிக் காவியங்கள் !
வீழ்ந்ததை எண்ணி வடிக்கும் கண்ணீர் !
கண்ணீரைத் துடைத்துக்கொண்டு,
நம்முன்னோர் அமைத்திட்ட களம் !
ஆம் !
புல்லரிக்கிறது !
இரத்த நாளம் புடைத்தெழுகிறது !
கண்ணீர் கொட்டுகிறது !
ஆயிரமாயிரம் உள்ளங்கள் குமுறுகின்றன !
ஏழ்கடல் கொந்தளிக்கிறது !
ஏ ! முஸ்லிமே வீறுகொண்டெழுவாய் !
உம்மூதாதையர்கள் -
கட்டடக் கலைகளை வளர்த்தார்கள் !
கவினுறு மாளிகைகளை அமைத்தார்கள் !
தர்க்க சாஸ்திரம் தந்தார்கள் !
வானியல் வளர்த்தார்கள் !
மருத்துவவியல் போதித்தார்கள் !
இஸ்லாத்தின் பொது எதிரிகளுடன் போராடினார்கள் !

PUBLIC LIBRARY
KALMUNAI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் ஆக்கிப்படைத்த அவர்கள்
தனித்துவம் பேணிடத் தயங்கவில்லை !
அந்தத் தனித்துவமே - அவர்களின்
தகமையை வளர்த்தது !
அவர்கள் இவ்வுலகுக்களித்த அருஞ்செல்வங்கள்
அளப் பெரியென -
அவையெல்லாம் இப்பொழுது பழங்கதைகள் !
அந்தப் பழங்கதைகளைக் கட்டுரைகளாக -
புத்தகங்களாக - வெளியிட்டு,
மேடைகளில் முழங்கித் தங்களை -
மேதாவிகளாகக் காட்டிக்கொள்வோர் அநேகர் !
வரலாற்று ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருப்போர்,
இப்போது நமக்குத் தேவையில்லை !
இப்போதெல்லாம் செயல்வீரர்களே நமக்கு வேண்டும் !
எமது முன்னோர் சாதித்தவைகளினால் -
அவர்களே பெருமைக்குரியவர்களாகிறார்கள் ;
நாமல்ல !
ஆதலால் -
இஸ்லாமிய உடன்பிறப்புக்களே !
பழம்பெருமை பேசுவோரை ஒதுக்கித் தள்ளிவிட்டு,
புதுமை படைக்கத் தயாராகுங்கள் !
புத்துலகு சமைக்கப் புறப்படுங்கள் !!
சொல்வதைச் செயல்வடிவமாக்குங்கள் !!!
ஏ, முஸ்லிமே ; நீ, எங்கு செல்கிறாய் !
இன்று நீ சென்று கொண்டிருக்கும் பாதை -
உன் மூதாதையர் தியாகங்கள் பலபுரிந்து,
இம்சை வதைக்குள்ளாகி,
இரத்தம் சிந்தி - நிலைநாட்டிய
தீன்வழிதானா ?
அதனை நீர், எண்ணிப்பார் !
இருந்தும் -
அதற்கெல்லாம் இப்போது,
உம் போன்றோர்க்கு நேரமேது ?
ஆம்,
அதுவும் எனக்குப் புரிகிறது - ஏனென்றால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகாயத நோக்கிலே,
இஸ்லாத்தை இடைபோடும்,
இன்றைய எம், முன்னணி முக்கியஸ்த்தர்களின்
சகவாசம் உன்னையும்
உலக சாகரத்தில் மூழ்கடித்துவிட்டது !
எனினும் -
என் இனியவனே !
இனிமேலாகுதல் - உன்
மாயைமலிந்த சிந்தனையிலிருந்து,
விடுபடமுயல் !
உன்னைச் சுற்றிவளைத்து -
வலம் வந்துகொண்டிருக்கும்,
உழுத்துப்போன சிந்தனையாளர்களை -
அவர்தம் வரட்டு வேதாந்தங்களை,
விரட்டிவிடு உதைத்து !
அவர்கள் -
உன் நண்பர்கள் போல் நடிக்கலாம்,
ஆனால் -
உண்மையிலேயே உன் நலனில்,
அக்கறை கொண்டவர்களல்ல ; அவர்கள் !
மாறாக -
உன்னை, மீழ முடியாத
நரகில்தான் கொண்டு சேர்ப்பர் !
நான் கூறும் இக்கூற்றினை,
நீர், ஏற்றுக் கொள் ; இ∴து உண்மை !
உன் நலனில் கொண்ட,
அக்கறையின் விளைவாகவே -
இதனை நான் கூறுகின்றேன் !
அந்த மனித ஷைத்தான்களின்
மாய வலையைவிட்டும் வெளியேற,
வீரப் பிரயத்தனம் செய் !
அப்படியெல்லாம் நான் சொல்கிற போது -
“நானென்ன முற்று முழுவதுமாக,
உலகப் பற்றில் திளைத்துவிட்டேனா ?
ஐங்காலம் தொழவில்லையா ?
ரமழானில் நோன்பிருக்கவில்லையா ?
ஹஜ்ஜும் பலதடவை செய்துள்ளேனே ?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நீ அங்கலாய்ப்பது - எனக்கு நீ,
சொல்லாமலேயே விளங்குகிறது !
என் உடற்பிறப்பே !
அப்படி நீர், நினைப்பது -
ஆச்சரியத்திற்குரிய ஒன்றல்ல ;
உனக்கு, இஸ்லாத்தைச் சொல்லித் தந்தவர்கள்,
செய்த பிழையது !
தோழா !
நீயறிந்திருப்பதுபோல -
'கலிமா'
'தொழுகை'
'சக்காத்து'
'நோன்பு'
'ஹஜ்ஜு'
என்பன -
பலவிதமான நோக்கங்களும்,
இச்சைகளும்,
மனித அவாக்களும்,
கலந்துவிட்ட சாம்பாரல்ல அவை !
அதனை நீர் முதலில் தெரிந்துகொள் !
எந்த வணக்கங்கள் -
வர்த்தக நோக்கோடு,
புரியப்படுகின்றனவோ -
அவை வணக்கமே அல்ல ;
எவை அல்லாஹ்வுக்காக - இ.:.க்லாஸோடு
நிறைவேற்றப்படுகின்றனவோ,
அவைதான் வணக்கம் !
ஒரே இறைவனை,
உளமாற ஒப்புக்கொண்டு - அவனை
அனுதினமும் ஐவேளை தொழுது,
நிதியிருப்பின் -
நிர்மலமோடு ஸகாத்தும் வழ்ங்கி,
ரமழான் மாதம் முழுவதும் நோன்பிருந்து,
வசதியிருப்பின் -
ஹஜ்ஜையும் கலப்படமின்றி
நிறைவேற்றிவரவேண்டிய நீ,
அவற்றையெல்லாம் -
அர்த்தமற்ற சடங்குகளாக்கி,
ஆசாடபூதியாய் ஆனதேன் ?
அன்பா நீயுணர்ந்துபார் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கங்கள் வர்த்தகங்களாக -
வாணிபங்களாக மாறிவிட்டால்,
வணக்கங்களென்று அவற்றை,
எண்ணிடலாகுமோ !
அல்லாஹ்வும் அவற்றைப் புறக்கணித்துவிடுவான்,
இது புரியுமாவுனக்கு ?
வணக்கங்கள் -
பல தத்துவங்களை உள்ளடக்கிய -
செயல்வடிவமாய் அமையவேண்டிய -
செயற்பாடுகள் அவை - அங்கே,
தூய்மை துலங்க வேண்டும் ;
உண்மை உயிரோட்டம் பெறல் வேண்டும் ;
நேர்மை துளிர்விடல் வேண்டும் ;
பொதுநலம் பொங்கவேண்டும் ;
பிறர்நலம் பேணப்படல் வேண்டும் !
வர்த்தக நோக்கில் - அல்லது,
சுயநலச் சுரண்டல் வழியில்,
வணக்கங்கள் பற்றி வழியுரைப்போன்,
வாயை அடைத்திடல் வேண்டும் ;
வளமான உன் கடமையது !
வல்ல நாயன் விரும்புவதுமதுவே !!
ஆக -
தனித்துவம் காத்திடுவீர் ;
அ·.து,
உலகாயதவாதிகள் காட்டும் வாதமல்ல ;
அல்லாஹ், அவனது ரசூல்மூலம்,
அழகிய செயல்வடிவமாய்த் தந்த
தனித்துவம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புத அறிவுரைகள்

தேனீயானது மலர்களில் உள்ள இனிய தேனைப் பருகுவதுபோல, ஒவ்வொரு கலையிலுமுள்ள உயர்ந்த அம்சத்தைத் தேர்ந்து அறிந்துகொள்!

அறிவைத் தேடிக்கொள்ளாமல் மதபக்தியில் மட்டும் ஆழ்ந்திருப்போர் செக்குமாடு போலாவார்!!

தவறான வழியில் செல்கின்ற அறிவாளியானவன் நாட்டுக்கு நஞ்சாக இருக்கின்றான்!!!

தன்னைப் பெரியவன் என்று கருதுபவனே மனிதரில் கேவலமானவன்!

பலர் முன்னிலையில் ஒருவனுக்கு அறிவுரை கூறுவது அவன்மீது குற்றம் சுமத்துவது போலாகும்!!

முட்டாளை உங்கள் நண்பனாக ஆக்கிக்கொள்ள வேண்டாம்; அவன் நன்மை என்று எண்ணிச் செய்யும் காரியம் உங்களுக்குத் தீங்காக முடியலாம்!!!

நீ கஞ்சனாக இருந்தால், ஒரு நயவஞ்சகன்கூட உன் சினேகிதனாக இருக்கமாட்டான்!

பண வெறியிலிருந்து தெளிவுபெறுவது கஷ்டம்; அந்த வெறியிலிருந்து காப்பாற்றுமாறு இறைவனிடம் பிரார்த்தனை புரியுங்கள்!!

- *அலி (ரலி)*

PUBLIC LIBRARY
KALMUNAI
014908

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியரின் இதர நூல்களிற் சில...

PUBLIC LIBRARY
KALMUNAI

- நோன்பின் அடிப்படை
- இஸ்லாமிய அறிவு வளர்ச்சி - ஓர் ஆய்வு.
- கலங்கிய உள்ளங்களுக்குத் தெளிவுதரும் மாமருந்து.
- தௌஹீதுக்கு எதிர்மறை வஹ்ததுல் வுஜூ த்.
- ஒளிக்குப்பின் இருள்; இருளுக்குப்பின் ஒளி.
- "ஹிஸ்புல்லாஹ்" என்பதன் விளக்கம்.
- சுபசோபனம் நிறைந்த ரமழான்.
- நோன்புப் பெருநாள் ஒரு கண்ணோட்டம்.
- ஹஜ்ஜின் அரசியல் பின்னணி.
- இவ்வாண்டு ஹஜ்ஜின் இனிய நினைவுகளும் - கசப்பான உண்மைகளும்.
- வையகத்தை வியப்பில் ஆழ்த்திய வள்ளல் நபியின் - விண்ணுலகப் பிரயாணம் மிஃராஜ்.
- திருமணத்தின் மூலம் ஆண்கள் விலைபோவது ஓர் - அவமானம்.
- கல்முனைக்குடி ஜும்ஆப் பள்ளிவாசல் வரலாறு.
- தீயாரோடிணைந்திருத்தலும் தீதே!
- வரலாற்றுப் பேழை.
- அல்குர்ஆன் கூறும் அழகிய உவமைகள்.
- இறுதிநாள்வரை ஓயாத உணர்வலைகள்.
- தனித்துவம்.
- பாலஸ்தீனப் பிரச்சினையும், முஸ்லிம் உலகின் எதிர்காலமும் - (அச்சில்)
- இஸ்லாத்தில் இனவாதத்திற்கு இடமில்லை - (அச்சில்)
- எண்ணச்சிதறல்கள் -

(இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளினதும் மாநாடுகள், கருத்தரங்குகளில் ஆற்றிய சொற்பொழிவுகளினதும் தொகுப்பு)

இளம்பிறை ஒப்செற் - மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org